# தேவ வார்த்தையின்

# தியானம்

### அஸ்திபார சத்தியம் தொகுப்பு 1

பீட்டர் டான்

© பதிப்பு உரிமை 2008 பீட்டர் டான் சுவிசேஷம். எல்லா உரிமைகளும் முன்பதிவு செய்யப்பட்டவை. பதிப்பாளரின் அனுமதியை வரிவடிவில் பெற்றாலன்றி இப்புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பிறமொழியாக்கம் செய்யவோ, துண்டு பிரசுரம் செய்யவோ, நகல் எடுக்கவோ, அச்சிடவோ, வேறு எவ்விதத்திலும் பயன்படுத்தவோ கூடாது.

இந்தப் புத்தகத்தின் pdf நகல் ஒன்றின் விலை A$10. விலை கொடுத்து இப்புத்தகத்தை வாங்க முடியாதவர்கள், ஆசீர்வதிக்கப்படவும் ஆவிக்குரிய வாழ்வில் வளரவும், இதை இலவசமாக கொடுக்கிறோம். எங்களது ஊழியம் தொடர்ந்து நடைபெற, உங்களால் முடிந்த பொருளாதார உதவியை நன்கொடையாக அனுப்புங்கள்.

உங்களது நன்கொடைகளை paypal வழியாக elshaddai1@bigpond.com க்கு அனுப்புங்கள்.

வேறு எந்த வழியிலும் உங்களது நன்கொடைகளை அனுப்ப தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

Peter Tan Evangelism

PO Box 27

Belconnen

ACT 2616, Australia.

Tel.: 00614 17755613

Email: elshaddai1@bigpond.com

## முகவுரை

இந்தப் புத்தகம் 'அஸ்திபார சத்தியங்களின் தொடர்' என்றழைக்கப்படும் புத்தகங்கள் பதினான்கில் முதல் புத்தகமாகும். ஒரு கிறிஸ்தவனை வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கைக்கு கொண்டு செல்லும் வகையில் அவைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இங்கு கூறப்படுகிற சத்தியங்கள், வெற்றி வாழ்விற்கு அத்தியாவசியமான அடிப்படை சத்தியங்களாக நான் கருதுகிறேன். புதிதாய் மனந்திரும்பியவர்களை நிலைநிறுத்த பின்தொடர் ஊழியத்தின் கருவிகளாகவும் இவைகளை பயன்படுத்தலாம்.

கிறிஸ்தவ ஜீவியத்தில் நடக்க தேவைப்படும் மிக முக்கியமான கொள்கைகளாக நான் கருதுபவற்றில் முதன்மையானதை இந்த முதலாம் புத்தகத்தில் பகிர்ந்து கொள்கிறேன். என்னுடைய சொந்த தனிப்பட்ட கிறிஸ்தவ ஜீவியத்தின் நடக்கையிலிருந்தும், நான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் அடைகிற முதிர்ச்சியின் அடிப்படையிலும் இது அமைந்துள்ளது. இந்தப் புத்தகத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் சத்தியங்கள் என்னுடைய வாழ்க்கைக்கும், ஊழியத்திற்கும் அஸ்திபாரங்களாகவும், வழிகாட்டியாகவும் உள்ளன.

*தியான வேத வாக்கியங்கள்* என்னும் மற்றொரு சிறிய புத்தகத்தின் *முதல், இரண்டாம் தொகுப்புகளின்* உதவியோடு, இங்கு கற்பிக்கப்படும் கொள்கைகளை அறிக்கையிடுதலின் மூலம் நடைமுறைப்படுத்த முடியும். மக்களை கட்டி வைக்கிற அல்லது அடிமைப்படுத்தக்கூடிய ஒரு செயல்பாட்டு முறையில் எனக்கு நம்பிக்கை இல்லை. ஆனால் எழுதப்பட்டிருக்கும் தேவ வார்த்தைக்குள் தேவ மக்களை ஆழமாய் வழிநடத்தக்கூடிய எந்த ஒரு செயல்பாட்டு முறையும் (அ) வழியும் வரவேற்கப்படத்தக்கதே.

எல்லாவற்றிற்கும் மேலாக, இந்தப் புத்தகத்தை நீங்கள் வாசிக்கும்போது, இந்த சத்தியங்கள் யாவும் இரத்தத்தினாலும், வியர்வையினாலும், கண்ணீரினாலும் நிரூபிக்கப்பட்டவை என்ற உண்மையை மனதில் கொள்ளவேண்டும். என்னுடைய சொந்த வாழ்க்கையின் ஒரு பகுதியை அவைகள் சுருக்கி சித்திரிக்கின்றன. இவைகள் வெறும் யோசனைகள் அல்ல. இவைகள் என்னுடைய வாழ்க்கையே! அவைகளைக் கைக்கொண்டே நான் வாழ்கிறேன்.

எழுதப்பட்ட அவருடைய வார்த்தையின் மேல் தேவன் தாமே உங்களுக்கு பசிதாகத்தை உண்டாக்குவாராக. மேலும் அது இந்தப் புத்தகத்தின் மூலம், ஜீவனுள்ளதாக உங்களுக்கு கடந்து வருவதாக.

பீட்டர் டான்

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.*

# அத்தியாயம் 1

# தியானத்தின் முக்கியத்துவம்

கிறிஸ்துவ வளர்ச்சியின் மிக முக்கியமான திறவுகோல் தியானமாகும். ஆயினும், 'தியானம்' என்ற வார்த்தை குறிப்பிடப்படும் போது, கிறிஸ்தவர்கள் சில வேளைகளில் அரை நிர்வாண குருவையோ அல்லது காலை மடக்கி உட்கார்ந்து மந்திரங்களை உச்சரிக்கும் துறவிகளையோ, கண்முன் கொண்டு வருவார்கள். தாவீது இராஜா காலை மடக்கி உட்கார்ந்து கொண்டு மந்திரங்களை உச்சரிப்பதை உங்களால் கற்பனை செய்ய முடியுமா? இரவும் பகலும் கர்த்தருடைய வேதத்தில் தியானமாயிருக்க அவர் சொன்னது நிச்சயமாகவே இந்த தியானமல்ல (சங்கீதம் 1:2).

*தியானம் என்னும் பதத்தின் வேதாகம வரையறை*

அப்படியானால் கிறிஸ்தவ தியானம் என்பதின் சரியான அர்த்தம் என்ன? சாதாரண வழக்கத்தில் 'தியானம்' என்ற வார்த்தையின் அர்த்தம், ஒரு பொருளையோ அல்லது கருத்தையோ மௌனமாக சிந்தித்துக் கொண்டிருப்பதுதான். தியானம் என்கிற செயல் அமைதியாக இருக்க அவசியமில்லை என்கிற தெளிவான போதனையை வேதபாடத்திலிருந்து காணலாம். பழைய ஏற்பாட்டில் 'தியானம்' என்கிற வார்த்தைக்கு பல எபிரேய வார்த்தைகள் இருக்கின்றன. ஆனால் முக்கியமான பதம் 'ஹகா' என்பதாகும். இதன் அட்சரப் பொருள் என்னவென்றால் 'முணுமுணுப்பு' ஆகும்.

ஹகா என்ற வார்த்தை 2 முறை 'முணுமுணுப்பு' என்றும் (ஏசா 59:3; 8:19), 6 முறை 'தியானம்' (யோசு. 1:8; சங்.1:2; 63:6; 77:12; 143:5; ஏசா. 33:18) என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, அதுமட்டுமல்லாமல் 'சொல்லிக்கொண்டிரு' என்று 4 முறையும் (சங். 35:28; 37:30; 115:7; நீதி.8:7) 'படித்தல்' என்று 2 முறையும் (நீதி. 15:28; 24:2) 'பேசு' என்று 1 முறையும் (சங். 71:24) மற்றும் 'உச்சரி' என்று 1 முறையும் (யோபு 27:4) மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இந்த வேத வசனங்களிலிருந்து நாம் தெரிந்து கொள்வதென்னவென்றால், தியானம் என்பது நமது வாயை, தேவ வார்த்தையைப் பேசும் அல்லது முணுமுணுக்கும் கருவியாக உபயோகிப்பதுதான். மேலும் நாம் வேதத்தை அமைதியாக வாசிக்கும்போது, தேவ வார்த்தையை எடுத்துக் கொள்ள நாம் நம்முடைய கண்களை மட்டுமே உபயோகப்படுத்துகிறோம். ஆனால், நாம் தேவ வார்த்தையை சத்தமாக வாசிக்கும்போது நமது கண்களை வாசிப்பதற்கும், நமது வாயை உச்சரிப்பதற்கும், நமது காதுகளை கேட்பதற்கும் பயன்படுத்துகிறோம். ஒன்றிற்கு பதிலாக நமது 3 புலன்களும் தேனுடைய வார்த்தையைப் பெற்றுக் கொள்கின்றன.

*என்னுடைய ஆவி மனிதனின் தரிசனம்*

நான் ஒரு இளம் கிறிஸ்தவனாயிருந்தபோது, வேதத்தை அமைதியாக வாசித்தேன். நான் இறையியல் கலாசாலையிலிருந்த மூன்று வருடமும் இது அப்படியே தொடர்ந்தது. ஊழியத்தின் நான்காம் ஆண்டில், என்னுடைய ஆவி மனிதனின் நிலையைக் குறித்த ஒரு தரிசனத்தை நான் கண்டேன். என்னுடைய ஆவி மனிதன் ஒரு மூங்கில்குச்சியைப் போன்று மெலிந்திருப்பதை நான் கண்டேன். சாத்தானின் பெருங்கூட்டமொன்று என்னை சுற்றி வளைத்தபோது, என்னால் வெற்றிகரமாக அவைகளை தாண்டி நடக்க இயலவில்லை. அவைகள் என் பாதையை மறித்தன. அந்த தரிசனத்தில் நான் அவைகளை மேற்கொள்ள எனக்கு பெலனில்லை.

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

நான் அந்த தரிசனத்திலிருந்து வெளியே வந்தபோது, ஆண்டவர் என்னுடைய ஆவிமனிதனின் நிலையைக் குறித்து என்னோடு பேச ஆரம்பித்தார். எனது படிப்பையும், வேத அறிவையும் பெருக்கி சேர்த்து வைத்த எல்லா வருடங்களிலும், நான் என் ஆவிமனிதனை உண்மையாக போஷிக்கவில்லை. அது போஷாக்கு குறைவானதாயும், பெலவீனமுள்ளதாயுமிருந்தது. நம்பிக்கையற்ற நிலையில் நான் ஆண்டவரைத் தேடினேன். என்னுடைய ஆவி மனிதனை போஷிக்க எனக்கு கற்றுக் கொடுக்கும்படி அவரிடம் கேட்டேன். தியானத்தைக் குறித்த சத்தியத்தை அப்பொழுதுதான் அவர் எனக்கு போதிக்க ஆரம்பித்தார்.

*தியானத்தின் விளைவுகள்*

ஆதியாகமத்திலிருந்து வெளிப்படுத்தின விசேஷம்வரைக்கும் எத்தனை வாக்குத்தத்தங்களை கண்டுபிடிக்கமுடியுமோ, அத்தனை வாக்குத்தத்தங்களையும் உட்கார்ந்து எழுதினேன். அந்த வாக்குத்தத்தங்களை என்னுடையதாக்கிக் கொண்டு, ஒரு நாளைக்கு ஆறு அல்லது ஏழு மணிநேரம் அவைகளை அறிக்கையிட ஆரம்பித்தேன். ஒரு முழு வருடமும் வேறு எந்தப் புத்தகத்தையோ, செய்தித் தாளையோ மற்றும் வேறு எதையுமே நான் படிக்கவில்லை. நான் கர்த்தருடைய வார்த்தையிலேயே முழுவதும் மூழ்கிப்போயிருந்தேன். ஆவிமனிதனின் அந்த நம்பிக்கையற்ற நிலையைப் பார்த்தபின் யார்தான் அப்படி செய்யமாட்டார்கள் ?

அந்த வருடத்தின் முடிவில், தேவ வார்த்தையை நான் போதித்துக் கொண்டிருந்தபோது, ஆவிக்குரிய வரங்கள் என்னில் வெளிப்பட ஆரம்பித்தன. அந்த ஒரு வருடம் நான் போட்ட அந்த அஸ்திபாரமும் அதன் விளைவும் என்னோடு தங்கியிருந்தன. ஊழியத்தில் உண்டான வெற்றியும், ஊடுருவலும் அந்த ஒரு வருட உறுதியான தியனத்தின் விளைவே என்பதை நான் கண்டுபிடிக்க முடிந்தது. வெளிப்பாடுகள் பாய்ந்தோட ஆரம்பித்தன. வேதத்தை கடினமாக அறிவுப்பூர்வமாய்க் கற்ற முந்தைய ஆண்டுகளிலுமில்லாத வகையில் வேதத்தை அதிகமாகக் கற்றுக்கொண்டேன்.

*ஆவிமனிதனில் இயேசுவின் பிரசன்னம்*

தேவ வசனத்தை தியானிப்பது தான் கிறிஸ்துவ வாழ்க்கையிலும், முழுநேர ஊழியத்திலும் வெற்றிக்கு முக்கிய திறவுகோல் ஆகும். ரோமருக்கு எழுதிய நிருபத்தில், பவுல் தேவனை தனது ஆவியோடு சேவித்ததாக சொல்லுகிறார் (ரோமர்1:9). பரிசுத்த ஆவியின் வல்லமையினால் தேவன் பவுலின் மூலம் நடப்பித்த பலத்த அற்புத அடையாளங்களை குறித்து அவர்களுக்கு எழுதுகிறார் (ரோமர் 15:18,,19). தேவ ஆவியானவர், பவுலின் ஆவியோடு சேர்ந்து பலத்த செய்கைகளை செய்து முடித்தார். பவுலுடைய ஆவி பலவீனமாயிருந்திருக்குமானால், சர்வவல்லமையுள்ள, பலமிக்க ஆவியானவர் தடைபண்ணப்பட்டிருப்பார்.

எபேசியர் 3:16ல், எபேசிய விசுவாசிகள் அவர்களது உள்ளான மனிதனில் பலப்படும்படி பவுல் ஜெபித்தார். உள்ளான மனிதன் என்பது வெளிப்படையாக ஆவிமனிதனையே குறிப்பிடுகிறது. ஆவிமனிதன் பெலப்படுத்தப்படுவது அவசியமாயிருக்கிறது. ஆவிமனிதன் கிறிஸ்தவ ஐக்கியத்தின் மூலம் புத்துணர்வு பெறமுடியும் (1 கொரி. 16:18; 2கொரி. 7:13). ஒரு பெலமுள்ள ஆவிமனிதன் தேவ ஆவியானவருக்கு பலமான ஒரு வாய்க்காலாக செயல்பட முடியும். ஒரு சங்கிலியின் பெலன், அந்த சங்கிலியிலுள்ள ஒரு பலவீனமான இணைப்பின் பெலத்திலேயே உள்ளது. நாம் எல்லாரும் தேவ பாத்திரங்களாக இருக்கிறோம். நம்மத்தியில் வெளிப்படுத்தப்படுகிற வல்லமையும், பிரசன்னமும், அவரைச் சார்ந்தது அல்ல. ஏனென்றால், அவர் தம்முடைய நிறைவையும், பிரசன்னத்தையும் நம் மத்தியில் வெளிப்படுத்த எப்போதும் சித்தமுள்ளவராகவேயிருக்கிறார். ஆனால், தேவ பிரசன்னத்தையும் வல்லமையையும் வெளிப்படுத்த, நம்முடைய ஆவி வாய்க்காலாகவும் கருவியாகவும் பயன்படக்கூடிய திறமையையும் பெலனையும் பொறுத்தே அது அமையும்.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.*

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையும், பிரசன்னமும் நம்முடைய ஆவிக்குள் இருக்கிறது (கலா.6:18; 2தீமோ.4:22). ஒரு பெலவீனமான மனிதஆவி, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிரசன்னத்தை பெலவீனமாகவே வெளிப்படுத்தும். பலமான, நன்கு போஷிக்கப்பட்ட ஒரு ஆவிமனிதன், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிரசன்னத்தையும், செயல்பாடுகளையும் பலமாக வெளிப்படுத்துவான். ஒரு கிறிஸ்துவன், தன் வாழ்க்கையில் இயேசுவின் பிரசன்னத்தை பெலவீனமாக வெளிப்படுத்தும்போது, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவிலோ, (அ) பரிசுத்த ஆவியானவரிலோ எந்தவித தவறும் இல்லை; ஆனால் ஏதோ தவறு அல்லது குழப்பம் அந்த ஆவிமனிதனில்தான் உள்ளது. அது ஆவிமனிதனின் போஷாக்கு குறைவுதான்.

*எபேசிய விசுவாசிகளுக்காக பவுலின் ஜெபம்*

பவுல் எபேசியருக்காக ஜெபிக்கையில், அவர்கள் குறிப்பாக உள்ளானமனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும், கிறிஸ்துவானவர் விசுவாசத்தினாலே அவர்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும் அவர் ஜெபித்தார் (எபே.3:17). நம்முடைய ஆவியின் பலம், நமது வாழ்வில் கிறிஸ்துவின் உள்ளானபிரசன்னம் தங்கியிருப்பதோடு எவ்வாறு சம்மந்தப்படுகிறது என்பதை கவனியுங்கள். அவருடைய இந்த ஜெபத்தின்முடிவு என்னவென்றால், அவர்கள் தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவேண்டும் என்பதே. எந்தஅளவிற்கு நம்முடைய ஆவிமனிதன் பலப்படுத்தப்படுகிறதோ அந்தஅளவிற்கு நாம் தேவ பரிபூரணத்தை நம்முடைய வாழ்வில் பெறமுடியும்! (எபே.3:19). பவுல் என்ன சொல்லுகிறார் என்ற குறிப்பை ஒருவேளை நாம் தவறவிட்டு விடுவோமானாலும், அடுத்த வசனத்தில் அதை திரும்ப இவ்விதமாய் வலியுறுத்துகிறார். நமக்குள் கிரியை செய்கிற வல்லமையின்படியே, தேவன் நமக்கு எல்லாவற்றையும் செய்ய வல்லவராயிருக்கிறார் (எபே.3:20).

நமது ஆவிமனிதனுக்கு உணவளித்து போஷிப்பதற்கு ஒரே வழி தியானம் மட்டுமே. தான் வளர்வதற்கு தேவவார்த்தையை தியானிப்பதுதான், புதிதாய் பிறந்த ஒரு கிறிஸ்துவன் கற்றுக் கொள்ள வேண்டிய முதல்காரியம் ஆகும். நீங்கள் வளரும்படி புதிதாய் பிறந்த குழந்தைகளைப்போல களங்கமில்லாத பாலாகிய திருவசனத்தின்மேல் வாஞ்சையாயிருங்கள். மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று இயேசு சொன்னார் (மத்.4:4). நாம் வேதவசனத்தை வாசிக்கிறவர்களாக மாத்திரம் அல்ல, அதை உட்கொள்ளுகிறவர்களாகவும் இருக்கவேண்டும். தேவவார்த்தையால் பிழைப்பதும், அதை உட்கொள்வதும், தேவவார்த்தையை தியானிப்பதையே குறிக்கிறது.

தேவவார்த்தையை தியானிப்பதும் அதன்படி செயல்படுவதும், கிறிஸ்துவவாழ்க்கைக்கும் ஊழியத்திற்குமான வெற்றிக்கு உத்திரவாதமாகும் (யோசு.1:8). கிறிஸ்தவர்கள் தியானத்தின் சத்தியத்தை மறுபடியும் புதிதாய் விளங்கிக்கொள்வது அவசியமாகிறது. சில கொள்கைகளை சாத்தான் திருடி அதைத் தீமைக்குப் பயன்படுத்துவதால், அதில் உண்மையில்லை என்றாகிவிடாது. போலி என்பது உண்மையைப் போன்று நடிப்பது. தியானம் என்பது தேவ வார்த்தையில் ஆரம்பமானது. மக்களின் வாழ்க்கையை கட்டுப்படுத்துவதற்கும், சொந்தமாக்கிக்கொள்வதற்கும் சாத்தானுக்கு வாசல் திறக்கப்பட்ட, அந்த கொள்கை தவறாக திரித்து பயன்படுத்தப்படுகிறது.

நாம் இரவும் பகலும் தியானிக்க அறிவுறுத்தப்படுகிறோம் (சங்.1:2). நாம் உட்கார்ந்திருக்கும் போதும், நடக்கும்போதும், படுத்துக்கொள்ளும் போதும், எழுந்திருக்கும்போதும், தேவவார்த்தையைப் பேசவேண்டும் (உபா.6:7). அவைகளை தங்கள் கைகளின்மேல் அடையாளமாகக் கட்டிக் கொள்ளவும், அவைகளை கண்களுக்கு நடுவே ஞாபகக்குறியாய் வைத்துக்கொள்ளவும் இஸ்ரவேலர்களுக்குச் சொல்லப்பட்டது. தேவவார்த்தையை அனுதின வாழ்வில் எடுத்துக்கொண்டு அதன்படி செயல்படுவதற்கு இது அடையாளமாகும். தினமும் தேவவார்த்தையை மனக்கண்முன் கொண்டுவந்து கற்பனைசெய்து பார்ப்பதற்கும் அடையாளமாகும் (உபா. 6:8). தேவ வார்த்தையை தியானிப்பது ஒரு தினசரி வாழ்க்கை முறை என்பதை வேதம் தெளிவாக்குகிறது.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

# அத்தியாயம் 2

## தேவ வார்த்தையை தியானிப்பது எப்படி

தியானம் என்பது வளர்ச்சிக்கான குறுக்குவழி அல்ல. அது ஆவிக்குரிய வளர்ச்சிக்கு உறுதியான, நிச்சயமான வழி ஆகும். ஒருவேளை உங்களுடைய வளர்ச்சியை உங்களால் நாளுக்குநாள் பார்க்க முடியாமல் இருக்கலாம். ஆனால் உங்கள் வாழ்க்கையிலும், ஊழியத்திலும் குறிப்பிடக்கூடிய வித்தியாசத்தை நீங்கள் உங்கள் வாழ்வின் முடிவில் காணலாம். ஒரு சிறிய பையன் தாடி வளர்த்துக் கொள்ள விரும்பி தன்னை கஷ்டப்படுத்திக் கொண்டாலும், புலம்பினாலும் ஒரே ஒரு முடியைக் கூட வளர்க்க முடியாது. அவன் செய்யவேண்டியதெல்லாம் நன்றாக சாப்பிட்டு சரியான நேரம்வரை காத்திருக்க வேண்டும். அப்பொழுது தானாகவே அது வளர ஆரம்பிக்கும். அவன் விரும்பினால் ஆட்டு தாடியைப் போன்று கூட வளர்த்துக் கொள்ளலாம்.

இதைப்போலவே, சில வேலைகளில் கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய பலன்களைப் பெற்றுக்கொள்ள கஷ்டப்பட்டு போராடுகிறார்கள். ஆனால் பலனில்லை. அவர்கள் பொறுமையாக தங்கள் ஆவியை போஷித்திருப் பார்களேயானால், ஆவிக்குரிய விளைவுகளை கூடவே தானாகவே பெற்றிருப்பார்கள். எந்தமனிதனும் தாடியை வளர்த்துக்கொள்ள கஷ்டப்படதேவையில்லை; அது இயற்கையாகவே வளர்கிறது. ஒரு மனிதனும் ஆவிக்குரிய பலன்களை சரீரமுயற்சியினால் அடைய முடியாது; அது ஆவி மனிதனது வளர்ச்சியின் விளைவாக இயற்கையாகவும் இயற்கைக் கப்பாற்பட்டும் வருகிறது.

*தியானத்தின் இரண்டு அம்சங்கள்*

தியானத்தின் முதல் பகுதி தேவ வார்த்தையை அறிக்கையிடுவதே. இரண்டாவது பகுதி தேவ வார்த்தையை மனதில் கற்பனை செய்து பார்ப்பது. தியானத்தின் முதற்பகுதிக்குள் இரண்டு துணை பகுதிகள் உள்ளன. தேவ வார்த்தையை நம்முடைய ஆவிக்குள் செல்லும்படி அறிக்கையிடுவது, மற்றும் தேவ வார்த்தையை நம்முடைய ஆவியிலிருந்தெடுத்து சூழ்நிலைகளின் மேல் கட்டளையாக அல்லது அதிகாரத்தோடு பேசுவது. இரண்டுமே தேவ வார்த்தையை பேசுவதுதான். ஆனால் விளைவு வித்தியாசமானது. தேவ வார்த்தையை பேசுவது முதலில் அந்த வார்த்தையை செழிப்புள்ள நிலமாகிய நம்முடைய ஆவியில் ஊன்றச் செய்வது. பின்பு ஊன்றப்பட்ட வார்த்தை வேர்விட்டு நம்முடைய வாழ்க்கையைச் சூழ்ந்துள்ள சூழ்நிலையின் மேல் ஆதிக்கம் செலுத்தச்செய்வது.

*வார்த்தையை ஊன்றச் செய்வது*

விசுவாசம் கேள்வியினால் வரும், கேள்வி தேவ வார்த்தையினால் வரும் (ரோமர்10:17). மற்றவர்கள் மூலமோ அல்லது நம்மூலமோ தேவ வார்த்தை பேசப்படும்போது, யார் அதைக் கேட்கிறார்களோ அவர்களுடைய இருதயத்தில் அது விசுவாசத்தை உண்டாக்கும். நாம் தேவ வார்த்தையை சத்தமாக நமக்கே கேட்கும் விதத்தில் வாசிக்க முடியும். ஆனால் அந்த வார்த்தையை நாம் நம்முடையதாக்கிக்கொள்ளும்போது தான் அது இன்னும் வல்லமையுள்ளதாயும், பயனுள்ளதாகவும் இருக்கும். கிறிஸ்தவ வாழ்க்கையின் மிகமுக்கியமான அடிப்படைத் தேவைகளில் ஒன்று என்னவென்றால், தேவ வார்த்தை நம்மைக் குறித்து என்ன சொல்லுகிறது என்பதை அறிந்து கொள்வதுதான்.

நாம் கிறிஸ்துவுக்குள் யாராயிருக்கிறோம் என்று சொல்லும் நூற்றிஐம்பது வசனங்கள் வேதத்திலிருக்கின்றன. ஆரோக்கியம், சுகமளித்தல், செழிப்பு, ஞானம், பரிசுத்தம் மற்றும் நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீர தேவைகளுக்கான ஆயிரக்கணக்கான வாக்குத்தத்த வசனங்கள் இருக்கின்றன. கிறிஸ்துவுக்குள்ளான சுதந்திரத்தை பெற்றுக்கொள்வதற்காக இலவசமாய்க்

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

கொடுக்கப்பட்ட இந்த வாக்குத்தத்தங்களை அநேக கிறிஸ்தவர்கள் அறியாமலிப்பது வருந்தப்படத்தக்கது.

மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களின் மூலம் நாம் அவருடைய திவ்ய சுபவாத்திற்கு பங்குள்ளவர்களாகிறோம் (2பேதுரு 1:4). தேவ வாக்குத்தத்தங்கள் தங்களுக்கல்ல வென்று சில கிறிஸ்தவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் தேவ வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசு கிறிஸ்துவுக்குள் ஆம் என்றும் ஆமென் என்றும் இருக்கிறதாக பவுல் தெளிவாக சொல்லுகிறார் (2கொரி.1:20). வேதத்திலுள்ள தேவ வாக்குத்தத்தங்கள் எல்லாம் நமக்கு சரிபட்டு வருமா என்ற கேள்விக்கு தேவன் கிறிஸ்துவுக்குள் ஆம் என்று பலமாக பதிலளிக்கிறார். நம்முடைய இரட்சிப்பிற்காக தமது சொந்த குமாரனையே நமக்காக மரிக்கும்படி தந்திருக்க, அவரோடுகூட மற்ற எல்லாவற்றையும் இலவசமாய் அருளாதிருப்பது எப்படி ? வாக்குத்தத்தங்களை நாம் எப்படி நம்முடைய வாழ்க்கைக்கு உண்மையாக்கிக் கொள்ளமுடியும் என்று கற்றுக்கொள்வதே வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கையின் இரகசியம் ஆகும்.

தேவ வார்த்தை நம்முடைய ஆவியில் உயிர்பெறும் வரை அதை முணுமுணுத்துக் கொண்டே தியானிப்பது தான் வாக்குத்தத்தங்களை நம்முடைய வாழ்க்கைக்கு உண்மையாக்கிக் கொள்ளக் கூடிய திறவுகோல் ஆகும். (எபிரேய பதம் ஹகா - முணுமுணுப்பு) தேவ வார்த்தையை இரவும் பகலும் முணுமுணுத்தல், நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்ட ஒரு மரம் தன்னுடைய வேர்களின் மூலம் தண்ணீரை தன்னுடைய மண்டலத்திற்குள் உறிஞ்சிக்கொள்வதற்கு ஒப்பிடப்படுகிறது (சங் 1:3).

*தியானத்திலுள்ள நான்கு படிகள்*

பாவத்தில் விழுவதற்கு நான்கு படிகள் உள்ளன. முதலில் சோதனையின் மூலம் கொண்டுவரப்படும் ஒரு சிந்தனை. இரண்டாவது, கற்பனையினால் கொண்டு வரப்படும் ஒரு படம். மூன்றாவது, சோதனையின் மேல் ஒரு ஆசை. கடைசியாக, அந்த பாவச்செயல். இந்த ஒவ்வொரு படியும் இன்னொரு படிக்கு வழிநடத்தும். சாத்தான் கொடுக்கும் ஒரு காரியத்தை தியானிக்க நேரம் செலவிடுவோமானால், சில வேளைகளுக்கு பின்பு அது கொடிய கற்பனைகளுக்கு வழிநடத்தும். இந்தக் கொடிய கற்பனை ஒரு நிர்ப்பந்தமான ஆசைக்கு வழிநடத்தும். இதற்கப்புறம் மிக எளிதாக அந்த இச்சைக்குட்பட்டு அந்த செயலை செய்ய நடத்திவிடும்.

ஒரு சோதனையை முதலாம், இரண்டாம் நிலைகளில் மேற்கொள்வது எளிதாகும். ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் தீவிரமான விருப்பமாகும்வரை சோதனையை தியானித்திருந்தால், அந்த சோதனையிலிருந்து தப்பித்துக்கொள்ள அவருக்கு கிறிஸ்தவர்களின் ஐக்கிய செல்வாக்கு தேவைப்படும்.

இந்த நான்கு படிகளும் எப்படி எதிர்மறைக்குப் பொருந்துமோ அப்படியே நேர்மறையாகவும் பொருந்தும். அநேக கிறிஸ்தவர்கள் தேவ வார்த்தையை வாசித்து, தாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று அறிந்துகொள்கிறார்கள். கிறிஸ்தவ கூட்டங்களில் இன்னும் அநேக பிரசங்கங்களை கேட்டு, தாங்கள் என்ன செய்யவேண்டும் என்று இன்னும் அதிக அறிவைப் பெற்றுகொள்கிறார்கள். கிறிஸ்தவர்கள் தாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று அறிந்துகொண்டு, அதைச் செய்ய விருப்பமில்லையென்றால் பிரச்சனை அதிகரித்துவிடும். நாம் செய்யவேண்டியவற்றை செய்யக் கூடிய விருப்பத்தைப் பெற்றுக்கொள்வது எப்படி ? நிச்சயமாக தியானத்தின் மூலமேதான்.

தேவ வார்த்தையை நாம் தினமும் அறிக்கைசெய்து தியானிப்பதால் நம்முடைய சிந்தனைகளில் நல்ல எண்ணங்கள் உருவாகும். நாளாக நாளாக, இந்த எண்ணங்கள் படமாக அல்லது கற்பனையில் ஒரு தரிசனமாக மாறும்.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.*

தொடர்ந்து இடைவிடாமல் வேத படங்களையும் தரிசனங்களையும் நம்முடைய கற்பனையில் படமாகக்காணுவது, அதை நிறைவேற்ற வேண்டும் என்ற வாஞ்சையை நமக்குள் உருவாக்கும். உறுதியான விருப்பம் இருந்தால் அதை செயல்படுத்துவது எளிது. தமக்கு விருப்பமான ஒன்றை செய்ய யாருக்கும் பிரச்சனை இருக்காது.

'தேவனின் தியான உணவு' என்னும் சிறிய புத்தகத்தை நான் எழுதியுள்ளேன். தேவ வாக்குத்தத்தங்களை கிறிஸ்தவர்கள் தங்களுடைய வாழ்க்கையில் தங்களுடையதாக்கிக் கொள்ள உதவும் ஆயத்தமாக்கப்பட்ட கருவியாக அவைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இது என்னுடைய தியான கோப்பிலிருந்து எடுக்கப்பட்ட சாராம்சமாகும். அது, கிறிஸ்துவுக்குள் நம் நிலை, (நூற்றிஐம்பது வசனங்கள்) ஆரோக்கியத்தைக் குறித்த வசனங்கள், சுகமளித்தல், செழிப்பு, சிந்தனை வாழ்க்கை, பரிசுத்தம், அன்பு, வசனத்தைச் சொல்லி ஜெபித்தல் ஆகியவை சம்மந்தமான தங்களுடையதாக்கிக்கொள்ளும் வசனங்களை உள்ளடக்கியது.

*தேவ வார்த்தையை கட்டளையாக்குவது*

தேவ வார்த்தை நம்முடைய ஆவியில் ஒருமுறை ஊன்றப்பட்டபின்பு, தேவ வார்த்தையை நாம் அறிக்கையிடுவது ஒரு புதிய பரிமாணத்தைப் பெறுகிறது. அது தேவ வார்த்தையை நமக்கு அறிக்கையிடுவதாய் மாத்திரமல்லாமல், நம்முடைய வாழ்க்கையில்வரும் சூழ்நிலைகளுக்கும், மலைகளுக்கும் எதிராய் அறிக்கையிடுவதாகவும் அமையும். இயேசு அலைகளைப் பார்த்துப் பேசினார், அவைகள் அமைதலாயிற்று. வியாதிகளிடம் பேசினார், அது பறந்துபோயிற்று. அவருடைய பேசப்பட்ட வார்த்தை பெரிய அதிகாரத்தை உடையதாயிருந்தது. இந்த நிலையில், நாம் பேசும் வார்த்தைகளும், நாம் பேசும்போது பெரிய அதிகாரத்தையும், வல்லமைகளையும் எடுத்துக்கொள்ள ஆரம்பிக்கும்.

மாற்கு11:23,24ல், நாம் சந்தேகப்படாமல் மலைகளைப் பார்த்துப்பேசும்போது அவைகள் தள்ளுண்டுபோம் என்று இயேசு சொன்னார். நம்முடைய இருதயம் தேவவார்த்தையால் நிரம்பியிருக்கும்போது, நாம் சந்தேகப்படமாட்டோம். விசுவாசம் கேள்வியினால் வரும், கேள்வி தேவனுடைய வார்த்தையினால் வரும். நம்முடைய இருதயம் தேவ வார்த்தையினால் ஊன்றப் பட்டதாயிருக்குமானால், நம்முடைய இருதயம் சந்தேகத்தினால் அல்ல, விசுவாசத்தினால் நிறைந்திருக்கும்.

கிறிஸ்தவர்கள் இந்த வாக்குத்தத்தத்தை உரிமைபாராட்டி மலைகளிடம் பேசியும் ஒன்றும் நடக்கவில்லையானால், அதற்கு அவர்கள் இருதயத்திலுள்ள சந்தேகமே காரணம். தேவ வார்த்தை அவர்கள் ஆவியில் வேர்கொள்ளாமலிருப்பதே அவர்கள் தங்கள் இருதயத்தில் சந்தேகப்படக் காரணமாகும். அவர்கள் அதை மூளையில் மட்டுமே சம்மந்தப்படுத்துகின்றனர். அவர்கள் தியானிக்க நேரம் எடுத்து, அந்த வார்த்தை அவர்கள் ஆவியில் வேர்கொள்ள அனுமதிக்கும்போது மட்டுமே, மலைகளைப் பார்த்துப் பேசுவது அவர்களுக்கு எளிதாகிறது.

தேவ வார்த்தையை நம்முடைய ஆவியில் அறிக்கையிடும் முதல் படியை தவிர்த்துவிட்டு, இரண்டாம் படியாகிய நம்முடைய ஆவியிலிருந்து வாரத்தையை கட்டளையாக கொடுக்கும் நிலைக்குப் போக முடியாது. தான் பேசிய வார்த்தைகள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது என்று இயேசு சொன்னார் (யோவா.6:63). வார்த்தை மாம்சமானவர்தான் இயேசு (யோவா.1:14). தேவனுடைய வார்த்தை ஜீவனும் நமது உடலுக்கெல்லாம் ஆரோக்கியமுமாகும் (நீதி.4:20-22). தேவ வாரத்தை ஜீவனுள்ளதாயும், நம்முடைய சிந்தனைகளை நல்ல வழியில் தாக்கக்கூடியதாயும், நம்முடைய எலும்புகளையும் ஊனையும் உருவக்குத்துகிறதாயும் இருக்கிறது (எபி. 4:12).

நம்முடைய இருதயம் தேவ வார்த்தையினால் நிரப்பப்பட்டதாகவும், செறிவூட்டப்பட்டதாயும் இருக்கும்போது, நாம் பேசும் வார்த்தைக்கு எதிராக நிற்க எந்த மலையாலும் பிரச்சனையாலும் முடியாது.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

கட்டளையினால் வரும்வல்லமை எல்லா கிறிஸ்தவர்களுக்கும் கொடுக்கப்பட்ட வாக்குத் தத்தமாகும். நாம் பேசுவதை நாம் பெற்றுக் கொள்ள முடியும், மற்றும் தேவ வார்த்தையோடு ஒத்துப்போகிறதையே நாம் பேசுவோம், ஏனெனில் நம்முடைய இருதயம் தேவ வார்த்தையால் நிரம்பியிருக்கிறது. நாம் என்ன சொல்லுகிறோமோ அதன்படியே நடக்கும் என்று இயேசு சொன்னார் (மாற்கு11:23). பாரம்பரிய சபைத்துவம் என்ன சொன்னாலும், அறிக்கையிடுதல் இன்னும் பொக்கிஷமாகவே இருக்கிறது. ஏனெனில் இயேசு அப்படி சொல்லியிருக்கிறார்!

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

# அத்தியாயம் 3

## மனதில் கற்பனை செய்து பார்க்கும் கலை

அறிக்கையிடுதல் சத்தமானது, ஆனால் கற்பனை செய்து பார்ப்பது அமைதியானது. நவீன கிறிஸ்தவத்தில் கற்பனை செய்து பார்ப்பது என்பது ஒரு இழந்துபோன கலையாயிருக்கிறது. ஆதிகால கிறிஸ்தவர்களான சவோனரோலா, மேடம் குயான் போன்றோரின் எழுத்துக்களிலிருந்து இந்த பரிசுத்தவான்கள் கற்பனை செய்துபார்க்கும் கலையைக் கற்றிருந்தார்கள் என்று அறியலாம். சாது சுந்தர் சிங் அவர்களின் எழுத்துக்களும் கற்பனை செய்து பார்க்கும் திறனின் அழுத்தத்தை அதே அளவு வெளிப்படுத்துகின்றன.

*மன வலிமையின் தரம்*

ஒரு பரிசுத்தமான சிந்தனையின் மீது நீண்டநேரம் கவனம் செலுத்த முடியாதபடி, அநேக மக்களின் மனங்கள் சோதனையினால் பலவீனமாகவும் நெறிதவறியும் இருக்கின்றன. அவர்கள் மனங்கள் எளிதாக திசை திருப்பப்படுகிறது மற்றும் பரிசுத்த சிந்தனைகள் புறக்கணிக்கப்படத்தக்க அளவிற்கு விரைவாகப் போய்விடுகிறது. இப்படிப்பட்ட கிறிஸ்தவர்கள் தேவ இராஜ்ஜியத்திலும், இந்த உலகிலும் ஒரு தோல்வியான வாழ்க்கையையே பொதுவாக வாழ்கின்றனர். நமக்கு பரிசுத்தமான சிந்தனை வாழ்க்கை இல்லாவிட்டால், பரிசுத்தமான வாழ்வு வாழ்வது இயலாத காரியம்.

மக்களுக்கு எப்படி வித்தியாசமான உடல் வலிமை இருக்கிறதோ, அப்படியே வித்தியாசமான மனவலிமையும் இருக்கும். ஆயினும் சிறிய மெலிந்த உடல்வாகு உள்ளவர்கள், உடற்பயிற்சி செய்ய நேரம் செலவிட்டு சரீரத்தை வலுவுள்ளதாக்கிக்கொள்ளலாம். இதே முறையில் பலவீனமான மனதையுடையவர்கள், மனதில் கற்பனைசெய்துபார்க்கும் பயிற்சியை செய்யும்போது மனவலிமையைப் பெருக்கிக் கொள்ளமுடியும்.

மாம்சசிந்தை மரணம். ஆனால் ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம் (ரோமர் 8:6) ஆவியின் சிந்தையோடு இருக்கும் செயல் – ஆவிக்குரிய காரியங்களை சிந்திப்பது – என்பது மனதில் கற்பனை செய்து பார்க்கக்கூடிய செயல். மனதில் கற்பனை செய்து பார்க்கக் கூடிய செயல், தேவ வார்த்தையில் நமது சிந்தனைகளை ஒருமுகப்படுத்துவதை உள்ளடக்கியது. இதனுடைய கடைசி விளைவு மனது புதிதாக்கப்படுதல் ஆகும்.

*மனதில் கற்பனை செய்து பார்க்கும் நான்கு படிகள்*

பழைய ஏற்பாட்டில் விசுவாசித்து நடந்த பரிசுத்தவான்கள் இந்த எல்லா நான்கு படிகளையும் அப்பியாசித்திருந்தார்கள். அவர்கள் வாக்குத் தத்தங்களை கண்டு பெற்றுக்கொண்டார்கள். அவைகளால் உறுதிப்படுத்தப்பட்டு, அவைகளை அணைத்துக்கொண்டு அறிக்கையிட்டார்கள் (எபி.11:13). முதல்படி கண்முன் கொண்டுவந்து பார்ப்பதை உள்ளடக்கியது. இரண்டாவது, விசுவாசத்தில் உறுதிப்படுவதை உள்ளடக்கியது. மூன்றாவது, உணர்ச்சிகளின் பெருக்கு மற்றும் நான்காவது , அறிக்கையிடுதல். தேவ வார்த்தையை தியானிப்பதோடு இந்த நான்கு படிகளும் எவ்வாறு சம்மந்தப்பட்டிருக்கின்றன என்பதை நீங்கள் காணலாம்.

முதல்படி கற்பனை செய்வதை உள்ளடக்கியது. நாம் தேவ வார்த்தையை வாசிக்கும்போது அது நம்முடைய காதுகளுக்கு வெறும் சத்தமாய் மாத்திரம் இராமல், பரிசுத்த ஆவியானவர் அந்த

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

வார்த்தையை நம்முடைய கற்பனைக்கு கொண்டு சென்று படங்களை உருவாக்க நாம் அனுமதிக்க வேண்டும். வேறு வார்த்தையில் சொன்னால் நாம் வசனத்தை நம்முடைய புத்தியை கொண்டு மாத்திரம் வாசிக்காமல், கற்பனையோடும் வாசிக்க வேண்டும்.

புதிய ஏற்பாட்டில் 'சிந்தை' என்ற வார்த்தையினுடைய கிரேக்க பதத்தின் அர்த்தத்தை ஆராய்ந்தால் நம்முடைய ஆத்துமாவிலுள்ள வித்தியாசமான அம்சங்களையும் செயல்பாடுகளையும் நாம் அறியலாம்.

### *சிந்தையின் இரண்டு அம்சங்கள்*

சிந்தையை குறிக்கும் இரண்டு முக்கிய கிரேக்க வார்த்தைகள் 'டையலோகிஸ்மாஸ்' மற்றும் 'டையனோயியா' ஆகும். 'டையலோகிஸ்மாஸ்' என்பது சிந்தையின் புத்தி மற்றும் பகுத்தறியும் பகுதிகளைக் கொண்டது. இந்தப் பகுதிதான் நாம் ஒரு காரியத்தை காரண காரியங்களோடு அறியவும், பகுத்து ஆராயவும் உதவுகிறது. இந்த வார்த்தை 'யோசித்து அறிதல்' என்று பல வேதபகுதிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (லூக். 9:47; அப். 18:4, 19; 2கொரி.10:5). மற்ற வார்த்தையான 'டையனோயியா' புதிய ஏற்பாட்டில் கற்பனை மற்றும் சிந்தை என்று பொதுவாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (லூக்.1:51; 10:27; எபி.8:10; 10:16). இந்த வார்த்தை இருதயத்தோடு தொடர்புபடுத்தி உபயோகிக்கப்பப்பட்டுள்ளது (லூக்.1:5; எபி.8:10) 'டையனோயியா' என்பது சிந்தனையின் கற்பனை செய்யும் பகுதியோடு நேரடியாக தொடர்புடையது என்று நம்புகிறேன். ஏனெனில் பவுல் 'டையனோயியாவின்' கண்கள் என்று பேசுகிறார் ('விளங்கி கொள்ளுதல்' – 'டையனோயியா' எபே.1:18).

'கற்பனை' என்பதற்கு சமமான பழைய ஏற்பாட்டில் உள்ள எபிரேய வார்த்தை 'யெட்ஸர்' . இதுவும் அதே அர்த்தத்தைக் கொண்டுள்ளது. அது கற்பனை என்று பலமுறை மொழி பெயர்க்கப்பட்டுள்ளது (ஆதி. 6:5; 8:21; உபா.31:21; 1நாளா.28:9; 29:18). தேவன் நம்முடைய கற்பனையைக் குறித்து அக்கரை உள்ளவராக இருக்கிறார் என்பதை வேதம் தெளிவாக காட்டுகிறது. சிந்தனையை புதிதாக்குவது கற்பனையை புதிதாக்குவதையும் உள்ளடக்க வேண்டும்.

### *கண்முன் படமாக்கிக் காண்பதின் முக்கியத்துவம்*

ஏவாள் அந்த நன்மை தீமை அறியும் மரத்தின் கனியைப் பார்த்தபோது, அதை இச்சித்தாள் (ஆதி. 3:6). லோத்து, சமபூமியின் இயற்கை வளத்தைக் கண்டபோது, தவறான தெரிந்தெடுப்பை செய்தான் (ஆதி. 13:10). ஆகான் பாபிலோனிய சால்வையையும் வெள்ளியையும் பொன்னையும் பார்த்தபோது அதை இச்சித்து எடுத்துக் கொண்டான் (யோசு.7:21). தாவீது இராஜா பத்சேபாளைக் கண்டபோது, அவள்மீது இச்சைகொண்டு விபச்சாரம்செய்து பின்பு கொலையும் செய்தான் (2சாமு.11:2). தவறான கற்பனை பலருடைய விழுதலுக்கு காரணமாயிற்று.

எனினும் நேர்மறையான பக்கத்தில், ஆபிரகாம் பகலில் பூமியின் தூளையும் இரவில் நட்சத்திரங்களையும் தன் சந்ததியாக பார்த்தபோது, அவனுடைய இருதயத்தில் விசுவாசம் மேலோங்க ஆரம்பித்தது. அவன் தேவ வாக்குத்தத்தங்களை உண்மையாக்கிக்கொண்டான் (ஆதி.13:14-16; 15:5,6). ஒரே வகையான சூழ்நிலையை இருவர் சந்திக்கும்போது, இருவரின் கற்பனையும் வெவ்வேறாக இருந்தால், இருவருக்கும் வித்தியாசமான பலன்கள் கிடைக்கும். அந்த பத்து வேவுகாரர்களும் தங்களைத் தாங்களே வெட்டுக்கிளிகளைப் போல கண்டார்கள், வனாந்திரத்திலேயே மடிந்து போனார்கள். ஆனால் யோசுவாவும் காலேபும் தங்களால் அந்த இராட்சதர்களை மேற்கொள்ளமுடியும் என்று கண்டார்கள். அவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் பிரவேசித்து அதை சுதந்தரித்துக்கொண்டார்கள் (எண்.13:28, 30,33) .

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

தண்ணீரின் மீது வெற்றிகரமாக நடப்பதற்கும் அல்லது மூழ்கிப் போவதற்கும் உள்ள வித்தியாசம் சிந்தனையிலும் கற்பனையிலும் உள்ளது. பேசப்பட்ட இயேசுவின் வார்த்தையின்படி பேதுரு தண்ணீரின் மேல் நடக்க ஆரம்பித்தான், ஆனால் அவன் அலைகளைப் பார்த்தபோது பயந்து மூழ்கத் தொடங்கினான்(மத்.14:28–30). தண்ணீர்மேல் நடக்கும் அற்புதத்தை நிர்ணயிப்பது வெளியில் நடக்கும் காரியங்களல்ல, உள்ளாக நடப்பதே – சிந்தனைகளும் கற்பனைகளும் தான்!

*மனதில் கற்பனை செய்து பார்ப்பதின் முறை*

நாம் வேதத்தை வாசிக்கும்போது, அந்தப் பகுதிகளை படமாக பார்க்க உதவிசெய்யும்படி ஆவியானவரின் உதவியை நாடவேண்டும். உதாரணமாக, மத்தேயு 14ஆம் அதிகாரத்தில் இயேசு தண்ணீரின்மேல் நடந்ததை வாசிக்கும்போது, ஒரு கணம் நம்முடைய கண்களை மூடி மனக்கண்முன் இயேசு தண்ணீரின்மேல் நடப்பதை பார்க்கவேண்டும். அதிகாலை இருட்டான வேளையில் தண்ணீர் பிரவாகிக்கிறதை காண வேண்டும். காற்று சீறுகிறதைக் கேட்கவேண்டும்.

அடுத்ததாக, காற்று எதிராயிருப்பதனால் சீஷர்கள் மிகுந்த பிரயாசத்தோடு மூச்சுவாங்க படகு ஓட்டுவதையும் நம்முடைய கற்பனை படம் பிடிக்க வேண்டும். பிறகு, தூரத்தில் ஒரு உருவம் தண்ணீர் மேல் நடந்துவருவதை சீஷர்கள் பார்த்து அலறுகிறதை நாம் கேட்க வேண்டும். முதலில் ஒரு அலறல், பின்பு யாரோ ஒருவர் பிசாசு என்றதினால் உண்டான பதற்றம், பீதியுடன் கூட அலறல்கள். கொந்தளிக்கும் அலைகளும், கடலின் சீற்றமும் அவர்கள் கப்பலை விட்டு ஓடிவிடமுடியாதபடிக்கு தடுத்திருக்க வேண்டும்.

அப்பொழுதுதான், 'பயப்படாதீர்கள்' நான் தான் என்கிற அவர்களுடைய எஜமானனின் சத்தத்தைக் கேட்டார்கள். கொஞ்ச நேரத்தில் மிகுந்த அமைதி நிலவியது. அடுத்து, அந்த அமைதியைத் துளைத்துக் கொண்டு, 'ஆண்டவரே, நீரேயானால், நான் ஜலத்தின் மேல் நடந்து உம்மிடத்தில் வரக் கட்டளையிடும்' என்று பேதுருவின் கரகரப்பான சத்தம் வந்தது.

எப்படி கற்பனையின் மூலம் சில வேத வசனங்களை உயிரோட்டமுள்ளதாக்க முடியும் என்பதற்கு மேலே கூறப்பட்டது ஒரு சிறிய உதாரணம். நாம் வேதத்தை வாசிக்கிறது மட்டுமின்றி, கற்பனையோடும் வாசிக்கவேண்டும். முதலில் எதையும் படமாகப் பார்ப்பது நமக்கு கடினமாயிருக்கும். ஏனெனில் நம்முடைய கற்பனைக்கு பயிற்சியும் வளர்ச்சியும் தேவைப்படுகிறது. எனினும் படிப்படியாக நமது மனது கடினமான பகுதிகளாகிய நிருபங்களையும் கற்பனை செய்துபார்க்கக்கூடிய அளவிற்கு பெலனடைந்துவிடும். காலமும் பயிற்சியும் நமது மனதை ஆவிக்குரிய காரியங்களில் வளரச் செய்யும், நாமும் சமாதானம் நிறைந்த பரிசுத்தமுள்ள சிந்தனையின் நன்மைகளை அறுவடை செய்ய ஆரம்பிப்போம்.

ஒரு விளையாட்டு வீரன் ஒவ்வொரு நாளும் சிறிது சிறிதாக பயிற்சி செய்து, தன்னுடைய சரீர பலத்தையும் உருவத்தையும் விருத்தியடையச் செய்வதுபோல, நாமும் ஒவ்வொரு நாளும் நேரம் எடுத்து தேவ வார்த்தையை கற்பனை செய்து பார்க்கும்படி நமது மனதை பயிற்றுவிக்க வேண்டும். ஐந்து நிமிடத்திலிருந்து, பதினைந்து நிமிடம், அரைமணி நேரம், ஒரு மணி நேரம் என்று அதிகரித்துக்கொள்ளலாம்.

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

எனவே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெனவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே தியானித்து சிந்தித்துக்கொண்டிருங்கள் (பிலி. 4.8).

*வாக்குத்தத்தங்களின் நிச்சயம்*

விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது (எபி.11:1). வாக்குத்தத்தங்கள் நமது ஆவியில் பதிக்கப்படும்போது நம்முடைய ஆவியில் நாம் அனுபவிக்கும் நிச்சயமும் உறுதியுமே விசுவாசம் ஆகும். நாம் தியானிக்கும் போதும் காட்சியாகப் பார்க்கும்போதும் நம்முடைய ஆவி கருத்தரிக்கும். அப்போது இந்த உறுதி கிடைக்கும். நமது ஆவியில் தேவ வார்த்தையை பதிக்காவிட்டால் நமக்கு வாக்குத்தத்தங்களைப் பற்றிய தகவலும் அறிவுமே இருக்கும். அது வெறும் மனதின் சம்மதமாகவே இருக்கும்.

ஆபிரகாம் ஒரு வாரிசுக்காக வாக்குதத்தத்தைப் பெற்றுக் கொண்டபோது, அவன் ஏறக்குறைய எழுபத்தைந்து வயதுள்ளவனாயிருந்தான். ஆனால் தேவன் அவனுடைய தொன்னூற்று ஒன்பதாம் வயதில் ஒரு குழந்தையைப்பற்றி பேசினபோது அவிசுவாசத்தால் அவன் நகைத்தான் (ஆதி.12:4; 15:4; 17:17). அவன் தன்னுடைய வம்சத்தார் நட்சத்திரங்களைப் போல எண்ணிக்கையுள்ளவர்களாக இருப்பார்கள் என விசுவாசித்தான் (ஆதி.15:5,6). தொண்ணூற்று ஒன்பதாம் வயதில் இஸ்மவேலே இந்த வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலாயிருப்பான் என்று நினைத்தான் (ஆதி.17:18).

ஆபிரகாமுக்கு தன்னுடைய சந்ததியாரைக் குறித்த வாக்குத்தத்தத்தில் நிச்சயமிருந்தது. ஆனால் சாராளின் மூலம் ஒரு மகன் பிறப்பான் என்ற நிச்சயம் இன்னும் கிடைக்காமலிந்தது. ஆரம்பத்தில் அவிசுவாசத்தைப் பிரதிபலித்தாலும், தேவன் தான் சொன்னதை நிறைவேற்ற வல்லவரென்று முழுவதும் நம்பி, முழுவதும் நிச்சயித்திருந்தான். தன்னுடைய சரீரம் செத்துப்போன, சாராளின் கர்ப்பம் செத்துப்போன சாத்தியமில்லாத சூழ்நிலையை சந்தித்துக்கொண்டிருந்தபோதும், அந்த உறுதி இருந்தது (ரோமர் 4:19). தேவன் இப்படிப்பட்ட சூழ்நிலையில் தான், ஆபிரகாம் சாராளுடைய பெயர்களை மாற்றும்படி கூறினார்.

அந்த நிமிஷத்திலிருந்து, ஆபிரகாம் தேவ வாக்குத்தத்தத்தைக் குறித்து தடுமாறவில்லை. அவன் தேவனை மகிமைப்படுத்தி விசுவாசத்தில் வல்லவனானான் (ரோமர் 4:20). விசுவாசம் கேள்வினாலும், கேள்வி தேவ வார்த்தையிலிருந்து வருவதாலும், ஆபிரகாம் தனக்களிக்கப்பட்ட வாக்குத்தத்தத்தை கருத்தாய் எண்ணி, தியானித்து விசுவாசத்தில் வல்லவனானான். தேவனை மகிமைப்படுத்தி, நன்றியறிதலைத் தெரிவித்தான். தேவ வார்த்தையை தியானிப்பது நிச்சயத்தைக் கொண்டு வருகிறது.

*வாக்குத்தத்தத்தை அணைத்துக்கொள்வது*

வாக்குத்தத்தத்தை அணைத்துக்கொள்வது என்பது வாக்குத்தத்தம் நிறைவேறும்போது உண்டாகிற எல்லா உணர்வுகளையும் அனுபவிப்பதை உள்ளடக்கியது. பார்ப்பது என்பது தூரத்தையும், நிச்சயப்படுத்தப்படல் என்பது தைரியத்தையும் அணைத்துக் கொள்வதென்பது அருகாமையிலிருப்பதையும் குறிக்கும். இந்த நிலையில் எது சிந்திக்கப்பட்டு மனக்கண் முன் காட்சியாகக் கொண்டுவரப்படுகிறதோ, அது அதிலுள்ள நல்ல உணர்வுகளை உண்டாக்க ஆரம்பிக்கும். உறுதிப்படுத்தப்படுதல் என்பது உணர்சிகளில்லாத தைரியத்தைக் குறித்து பேசுகிறது.

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

உணர்வுகளைப் பின்பற்றி விசுவாசம் வருவதில்லை, ஆனால் உணர்வுகள் விசுவாசத்தைப் பின்பற்றி வரும்.

உதாரணமாக, நீங்கள் ஒரு விளையாட்டு வீரராக இருந்து சுகவீனமாய் மருத்துவமனையில் படுத்துக்கொண்டிருக்கிறீர்கள். சுகமளிக்கும் தேவ வாக்குத்தத்தங்களை நீங்கள் காட்சியாகப் பார்த்து திரும்ப நீங்கள் ஓட்டப்பந்தயம் ஓடுவதாக காணவேண்டும். சுகமளிக்கும் வசனங்களை உங்களுக்கு நீங்கள் அறிக்கையிடுகிறீர்கள். ஓட்டப் பந்தயத்தில் உங்களைக் காண்கிறீர்கள். மக்கள்கூட்டம் உங்களை உற்சாகப்படுத்துகிறது. நீங்கள் முழு ஆரோக்கியத்தோடு உறுதியாக முதல் நிலைக்கு ஓடி வருகிறீர்கள். வெற்றியின் சந்தோஷம் உங்களை நிரப்புகிறது. உங்கள் குடும்பத்தினர் உங்களுக்கு வாழ்த்துத் தெரிவிக்கின்றனர். இப்படி நீங்கள் காட்சியாகப்பார்ப்பவைகளின் சந்தோஷம், நீங்கள் மருத்துவமனையில் படுத்துக்கொண்டிருப்பதை மறக்குமளவிற்கு உங்களை ஆட்கொள்கிறது. நீங்கள் கற்பனை செய்துபார்த்தவைகளைக் குறித்து சந்தோஷப்பட ஆரம்பிக்கிறீர்கள். அப்பொழுதுதான் திடீரென நீங்கள் படுக்கையிலிருப்பதை உணர்கிறீர்கள். அந்த வேளையில் ஆரோக்கியமும், சுகம்பெறும் நிச்சயமும் உங்களுடைய ஆவியில் பலமாகக் கட்டப்படும்.

வாக்குத்தத்தத்தைக் காணும் முதல்படியில் நாம் தரிசனத்தைப் பற்றிக் கொள்கிறோம், ஆனால் மனக்கண்முன் காட்சியாகப் பார்க்கும் இந்த மூன்றாம்படியில், தரிசனம் நம்மைப் பற்றிக்கொள்ளும். அது நம்மை அசைக்கிறது. அது நம்மை உற்சாகப்படுத்துகிறது. அது நம்மைத் தொடுகிறது. அந்த தரிசனத்தின் உண்மைநிலை நம்மைச் சுற்றியுள்ள காரியங்களின் உண்மை நிலையையும் வெகுவாய் மிஞ்சி விடுகிறது. வாக்குத்தத்தங்களை அணைத்துக்கொள்வது என்பது இதுதான். தரிசனத்தை உணர்வுப்பூர்வமாக அனுபவிக்கிறோம்.

*வாக்குத்தத்தங்களை அறிக்கையிடுதல்*

கண்படமாக்கி காட்சியாகப் பார்க்கின்ற இந்த மூன்றாம் நிலையான வாக்குத்தத்தத்தை அணைத்துக்கொள்ளும் நிலைக்கு கடந்து வரும் வேளையில், நான்காவது படியான அறிக்கையிடுதல் எளிதாகி விடுகிறது. அநேகருக்கு இந்த நான்காம்படி கடினமாயிருக்கிறது. ஏனெனில் முதல்மூன்று படிகளையும் அவர்கள் கடந்துவரவில்லை. வாக்குத் தத்தத்தை அறிக்கையிடுதல், இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல் அழைத்தலை உள்ளடக்கியது. இதற்குமுன்பு பார்த்த வாக்குத்தத்தத்தை கட்டளையாக பேசுவது என்ற கொள்கைக்கு சமமாக இந்தக் கொள்கையும் உள்ளது.

மலையைப் பார்த்து தள்ளுண்டுபோ என்று நாம் பேசும்போது, நாம் பெற்றுக்கொண்டதாக விசுவாசிக்கவேண்டும் (மாற்கு11:23,24). ஆபிரகாமும் சாராளும் ஈசாக்கை பெறும் முன்னமே, ஆபிரகாம் தன்னை அநேகம் ஜாதிகளுக்கு தகப்பன் என்று அழைத்தான். இந்த உலகத்திற்கு அவன் பொய் சொல்லுகிறவனாயிருந்தான். ஏனெனில் அவர்கள் இன்னும் அதைப் பார்க்கவில்லை, ஆனால் ஆண்டவருக்குள் அவன் உண்மை பேசுகிறவனாயிருந்தான். ஏனெனில் தேவன் அதைச் சொன்னார். சூழ்நிலைகளைவிட அவன் தேவனை விசுவாசித்தான்.

வரவேண்டிய காரியங்களை அவைகள் இருந்ததைப்போல அறிக்கையிடுவதற்கும், இருக்கின்ற காரியங்களை இல்லாததைப் போல் மறுதலிப்பதற்கும் உள்ள வித்தியாசத்தை அறிந்து கொள்வது முக்கியமாகும். ஆபிரகாம் தனது சூழ்நிலைகளிலுள்ள சாத்தியமல்லாதவற்றை மறுதலிக்கவில்லை. ஆனால் அவைகள் தொடர்ந்து நீடிக்கக் கூடிய உரிமையை மறுதலித்தான். கிறிஸ்தவ அறிவியல் என்னும் துர்உபதேசக் கூட்டத்தார், இருக்கும் இயற்கையான சூழ்நிலையை மனதில் தோன்றும் கானல் நீர் என்று சொல்லி மறுதலிப்பார்கள் (அ) ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். ஆயினும் விசுவாசஅறிக்கை என்பது, இயற்கை சூழ்நிலைகளை உண்மை என்று விளங்கிக் கொண்டு, விசுவாசத்தாலும் அறிக்கையிடுவதாலும் அதை மாற்றி அமைக்க முடியும் என்று நம்புவதாகும். இந்தக் கொள்கை விசுவாச இயக்கத்தோடு ஆரம்பிக்கவில்லை, மாறாக அது இயேசுவின் ஊழியத்தோடு ஆரம்பமாயிற்று.

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

இயேசு சூழ்நிலைகளின் மேல் வார்த்தையின் வல்லமையை விளங்கச் செய்தார். அதேபோல் விசுவாசிப்பதற்கும், ஆளுகையை எடுத்துக் கொள்வதற்கும் தம்முடைய சீஷர்களுக்கு திரும்ப திரும்ப இயேசு அறிவுறுத்தினார்.

எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் (மாற். 11:23).

கடுகு விதையளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால், நீங்கள் இந்த மலையைப் பார்த்து, இவ்விடம் விட்டு அப்புறம்போ என்று சொல்ல, அது அப்புறம்போம்; உங்களால் கூடாதகாரியம் ஒன்றுமிராது(மத்.17:20).

நீங்கள் சந்தேகப்படாமல் விசுவாசமுள்ளவர்களாகயிருந்தால், இந்த அத்திமரத்திற்குச் செய்ததை நீங்கள் செய்வதுமல்லாமல், இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து சமுத்திரத்திலே தள்ளுண்டு போ என்று சொன்னாலும் அப்படியாகும் (மத்.21:21).

நமக்கு விசுவாசமிருந்தால், நம்முடைய வார்த்தைகள் சூழ்நிலையை மாற்றக்கூடிய வல்லமையுள்ளது என்பதில் சந்தேகமில்லை என்று இயேசு கூறுகிறார். நாம் அறிக்கையிடுகிறதை நம்மால் பெற்றுக்கொள்ளமுடியும்.

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.

# அத்தியாயம் 4

## வார்த்தைகளின் முக்கியத்துவம்

பேசப்படும் வார்த்தைகள் கிறிஸ்தவ வாழ்க்கையில் முக்கியமான பங்குவகிக்கின்றன. ஒருவன் தன் நாவை அடக்காமல் தன்னைத் தேவபக்தியுள்ளவனென்று எண்ணினால், அவனுடைய தேவபக்தி வீணாயிருக்கும் (யாக்1:26). புதிய ஏற்பாட்டில் 'வார்த்தை'என்ற பதத்தைக் குறிக்க இரண்டு கிரேக்க வார்த்தைகள் உள்ளன. முதலாவது 'லோகோஸ்' அதன் அர்த்தம் ஜீவனுள்ள வார்த்தை என்பதாகும்–எல்லா யோசனைகளுக்கும் வார்த்தைகளுக்கும், சிருஷ்டிப்புக்கும் மூலாதாரம் (வாழ்க்கையின் கொள்கைகள்). இரண்டாவது 'ரேமா' என்பதற்கு பேசப்படும் வார்த்தை' என்று அர்த்தம்.

*'லோகோஸ்' மற்றும் 'ரேமா'வை விளங்கிக்கொள்ளுதல்*

கிறிஸ்தவன் 'லோகோஸ்' என்பதை பின்வருமாறு விளங்கிக் கொள்ளலாம். அது தேவன் மனிதனுக்கு வெளிப்படுத்திய எழுதப்பட்ட வார்த்தையாகிய வேதத்தையும் உள்ளடக்கிய முழுமையான எல்லா தேவ ஞானமுமாகும். எனவே எழுதப்பட்ட வார்த்தை என்பதை தேவன் மனிதனுக்கு வெளிப்படுத்திய 'லோகோஸ்' ன் தொகுப்பு என்றெடுத்துக் கொள்ளலாம்.

'ரேமா' என்பது பேசப்படும் வார்த்தையையே எப்போதும் குறிக்கிறது. நம்முடைய ஆராய்ச்சிக்காக இதையே அர்த்தமாக எடுத்துக்கொள்ளலாம். அநேக கிறிஸ்தவர்களுக்கு 'லோகோஸ்', 'ரேமா' ஆகிய வார்த்தைகளுக்கு இடையே உள்ள வித்தியாசம் மற்றும் உறவைக் குறித்து ஒரு தெளிவில்லாத எண்ணம் உள்ளது. சில கிறிஸ்தவபுத்தகங்களும் போதனைகளும் 'லோகோஸ்' மற்றும் 'ரேமா' பதங்களுக்கான ஒற்றுமையை பிரித்து விட்டதினால், அநேக கிறிஸ்தவர்கள் அந்த இரண்டுக்குமுள்ள தொடர்பையோ, உறவையோ அறியாமலிருக்கிறார்கள்.

'ரேமா' என்பது ஒரு குறிப்பிட்ட மனிதனுக்கு, ஒரு குறிப்பிட்ட நேரத்தில், ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக தெளிவாக வெளிப்படுத்தப்பட்ட 'லோகோஸ்'ன் ஒரு பகுதியே ஆகும். ரேமாவை பெற்றுக்கொண்ட மனிதனுக்கு அது நேரடியாகவும், மறைமுகமாக மற்றவர்களுக்கு உதாரணமாக அமைந்தும் பயனளிக்கும். வேதம் 'லோகோஸ்'ஐயே உள்ளடக்கியிருக்கிறது. ஆனால் வேதத்தில் உள்ள எல்லா 'லோகோஸ்'ம் வேதத்தில் உள்ள மனிதர்களுக்கு 'ரேமா'வாகவே இருந்திருக்கிறது. 'ரேமா' 'லோகோஸ்'லிருந்து வருகிறது. 'லோகோஸ்' என்பது எல்லா 'ரேமா'வின் தொகுப்புதான்.

இதை விளக்கக்கூடிய ஒரு வழி மனித உடலின் ஒற்றுமையாகும். முழு மனித உடலும் 'லோகோஸ்'ஐக் குறிக்குமானால் தனிப்பட்ட செல்கள் 'ரேமா'வைக் குறிக்கும். நுண்ணோக்கியால் பார்க்கக்கூடிய ஒவ்வொரு செல்களும் தனிப்பட்ட ஒரு குறிப்பிட்ட வேலையை ஒரு குறிப்பிட்ட இடத்தில் செய்கின்றன மற்றும் ஒரு குறிப்பிட்ட காலஅளவிற்கு அவைகள் உயிர் வாழ்கின்றன. முழு சரீரமும் கோடிக்கணக்கான செல்களால் ஆனது.

சில நேரங்களில் வேதத்தில் 'லோகோஸ்', 'ரேமா' ஆகிய இரண்டு வார்த்தைகளும் ஒன்றிற்கு பதிலாக மற்றொன்று உபயோகப்படுத்தப்பட்டுள்ளன. அப்போஸ்தலர் நடபடிகள் பத்தாம் அதிகாரத்தில் அதன் ஆக்கியோன் லூக்கா இவ்வாறு பதிவுசெய்கிறார். பேதுரு 'ரேமா'வைப் பிரசங்கித்தபோது, 'லோகோஸ்'ஐக் கேட்டுக் கொண்டிருந்த எல்லார்மேலும் பரிசுத்தஆவியானவர் இறங்கினார். இந்த இரண்டுமே 'வார்த்தை' என்று ஆங்கில வேதாகமத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. 'லோகோஸ்', 'ரேமா' ஆகிய இரு வார்த்தைகளும் பேதுரு பிரசங்கித்த அதே பிரசங்கத்தையே குறிக்கிறது.

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

வேதத்திலே பதிவுசெய்யப்பட்டுள்ள அற்புதங்களான செங்கடலைப் பிளந்தது, சூரியசந்திரனை நிறுத்தியது, தண்ணீரின்மேல் நடந்ததுயாவும் தேவ மனிதர்கள் எப்படி 'ரேமா'வைக் கேட்டு அப்படிப்பட்ட அற்புதங்களை நடப்பித்தார்கள் என்பதற்கு சான்றாகும். அந்த அற்புதங்கள் நமக்கு 'ரேமா' அல்ல. ஆகவே யாராவது ஒருவர் அப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்ய விரும்பினால், அவர்கள் தாங்களே 'ரேமா'வைக் கேட்பது அவசியமாகிறது.

எனினும், வேதத்திலே உள்ள சில வாக்குத்தத்தங்கள் வாசிக்கிற யாவருக்கும் தெளிவான 'ரேமா'வாக உள்ளன. 'அவரை விசுவாகிக்கிறவன் எவனோ', 'உங்களில் யாராவது வியாதிப்பட்டால்', 'என்னை விசுவாசிக்கிறவன் எவனோ' இப்படிப்பட்ட வசனங்களையெல்லாம் வாசிக்கிறவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேருக்கும் 'ரேமா'வாக வருகிறது (யோவா. 3:16; யாக். 5:14, யோவா. 14:12). இரட்சிக்கப்படுவது தேவசித்தமா என்று நாம் அவரிடத்தில் கேட்கத் தேவையில்லை. அவருடைய வார்த்தை தெளிவாக அவருடைய சித்தத்தை சொல்லுகிறது (1 தீமோ. 2:4).

சில கிறிஸ்தவர்கள் தண்ணீரின் மேல் நடப்பதையும் சுகம் பெறுதலையும் சமமாக நினைக்கிறார்கள். தண்ணீரின் மேல் நடப்பதற்குமுன் எப்படி தேவசத்தத்தைக் கேட்பது அவசியமோ அப்படியே சுகம் பெறுமுன்பும் தேவசத்தத்தைக் கேட்கவேண்டும் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். தண்ணீரின்மேல் நடப்பது ஒரு வாக்குத்தத்தமல்ல, ஆனால் சுகமளித்தல் ஒரு வாக்குத்தத்தம் என்பதை அவர்கள் உணராதிருக்கிறார்கள். இந்த இரண்டுவசனங்களும் ஒரேவகையைச் சேர்ந்ததல்ல. வாக்குத்தத்தங்கள் என்று பிரிக்கப்படாத வசனங்களெல்லாம் சில பகுதிகளில் தேவன் செய்யக்கூடிய அற்புதங்களாக பதிவு செய்யப்பட்டுள்ளன. அவைகளைச் செய்வதற்கு, புதிய 'ரேமா'வையும் கட்டளையையும் தேவனிடத்திலிருந்து நாம் மறுபடியும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

மாறாக, வாக்குத்தத்தங்கள் என்று பிரிக்கப்பட்டிருக்கும் வசனங்கள், சில நிபந்தனையுள்ளவைகள் சில நிபந்தனையற்றவைகள். அந்த வாக்குத்தத்தங்கள் நிறைவேறுவது அந்த குறிப்பிட்ட நிபந்தனையைப் பொறுத்தது. விசுவாசத்தின் மூலம் சுகத்தைப் பெற்றுக்கொள்வது கிறிஸ்தவ மனிதத்துவம் என்று சொல்பவர்கள், இரட்சிப்பையும் வேதத்திலுள்ள வாக்குத்தத்தங்களின் மீதுள்ள விசுவாசத்தால் பெற்றுக் கொள்ளலாம் என்று பரிந்துரை செய்வார்கள். தங்களுடைய தெளிவில்லாத இறையியலில் உறுதியாயிருக்க, அவர்கள் வசனங்களின் அடிப்படையில் இரட்சிப்பை உரிமைபாராட்டுவது கிறிஸ்தவ மனிதத்துவம் என்பார்கள். ஏனென்றால் அது தேவவாக்குத் தத்தங்களின் அடிப்படையில் நம்முடைய பாவங்களிலிருந்து நம்மை இரட்சிக்க தேவ கரத்தை திருக்குவது ஆகும்.

சுகமளித்தல் நமக்கு தேவ 'ரேமா'வா என்பது பிரச்சனையல்ல. ஆனால் விசுவாசத்தை நம்முடைய இருதயத்தில் பதிக்கச்செய்து உறுதிகிட்டும்வரை தேவவார்த்தையை தியானிப்பதாலேயே ஆகும். அநேக கிறிஸ்தவர்கள் தேவவார்த்தையின்படி செயல்பட்டு விசுவாசத்தின் மூலம் சுகத்தை உரிமைபாராட்டுகிறார்கள். ஆனால் அவர்கள் இருதயத்தில் எந்த உறுதியும் இல்லை. விசுவாசம் அவர்கள் இருதயத்தில் உண்டனதினால் அவர்கள் அப்படி செய்யவில்லை. மற்றவர்கள் செய்கிறதைப்பார்த்து அவர்களும் செய்கிறார்கள். தேவவார்த்தை அவர்கள் மூளைக்கு வெறும் தகவலாகவே இருக்கிறது. ஆனால் அவர்கள் இருதயத்திற்கு அவைகள் இன்னும் வெளிப்பாடாக வரவில்லை.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

*அறிக்கையிடுதலின் வரையறை*

'அறிக்கையிடுதல்' என்னும் வார்த்தை கிரேக்க வார்த்தையான 'ஹோமோலோகோஸ்' என்ற வார்த்தையிலிருந்து வருகிறது. அதன் அட்சரப் பொருள் 'லோகோஸ்'ன் அர்த்தத்தைப் போன்றதே. ஆகவே அறிக்கையிடுதல் என்பது 'லோகோஸ்' அல்லது தேவ வார்த்தை நம்மைப் பற்றியோ நம்முடைய சூழ்நிலைகளைப் பற்றியோ சொல்வதையே சொல்வதாகும். இதை நான் 'வார்த்தையை அறிக்கையிடுதல்' என்று அழைக்கிறேன். இந்த கொள்கையை செயல்படுத்துவதென்பது அதே விசுவாசத்தின் ஆவியை செயல்படுத்துவதாகும். விசுவாசித்தேன், ஆகையால் பேசினேன் என்று எழுதியிருக்கிறபடி, நாங்களும் அந்த விசுவாசத்தின் ஆவியை உடையவர்களாயிருந்து, விசுவாசிக்கிறபடியால் பேசுகிறோம் (2கொரி. 4:13).

இஸ்ரவேல் தேசத்து வேவுகாரர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திலிருந்து திரும்பிவந்தபோது, அதில் பத்துபேர் தோல்வியையும், அதைரியத்தையுமே பேசினார்கள். அவர்கள் துர்ச்செய்தியை பரம்பச் செய்தார்கள் என்று வேதம் சொல்லுகிறது(எண்.13:32). தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதும் சொன்னதுமான காரியங்களோடு அவர்கள் சொன்னது ஒத்துப்போகவில்லை. யோசுவாவும் காலேபும் மாத்திரமே நம்மால் மேற்கொள்ள முடியும் என்று சொன்னார்கள். வாக்குத்தத்த தேசத்தில் நுழைந்ததும் யோசுவாவும் காலேபும் மாத்திரமே.

தாவீது கோலியாத்தின் மீது ஒரே ஒரு கல்லையும் எறியும் முன்பே தைரியமாக இப்படிச் சொன்னான், 'உன் தலையை உன்னை விட்டு வாங்கி, பெலிஸ்தியருடைய பாளையத்தின் பிணங்களை இன்றையதினம் ஆகாயத்துப் பறவைகளுக்கும், பூமியின் காட்டுமிருகங்களுக்கும் கொடுப்பேன்; அதனால் இஸ்ரேவேலில் தேவன் ஒருவர் உண்டு என்று பூலோகத்தார் எல்லோரும் அறிந்து கொள்வார்கள் (1சாமு.17:46). அவன் தன்னுடைய கவணிலிருந்து கல்லை விடுவிக்குமுன் வார்த்தையை அறிக்கையிடுதலை விடுவித்தான்.

நம்முடைய வாயின் அறிக்கை நமக்கு சாதாகமாகவோ நமக்கு எதிராகவோ, நேர்மறையாகவோ எதிர்மறையாகவே செயல்படுகிறது. யாக்கோபு, லாபானுடைய போலி தெய்வங்களை வைத்திருக்கிறவன் சாக வேண்டும் என்று அறியாமல் சொல்லிவிட்டான். அதையடுத்து, அந்த விக்கிரகங்களை வைத்திருந்த ராகேல் மரித்துப்போனாள் (ஆதி. 31:32; 35:16-19). நாம் பேசும் ஒவ்வொரு வார்த்தையைக் குறித்தும் நாம் நியாயந்தீர்க்கப்படுவோமென்று இயேசு சொன்னார் (மத்.12:36,37). மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கிறது (நீதி.18:21). இயற்கையின் முழு நிகழ்வுகளையும் கட்டுப்படுத்தி ஆளும் வல்லமை நாவிற்கு உண்டு (யாக்.3:4-6).

யாக்போபு, தன்னுடைய நிருபம் மூன்றாவது அதிகாரத்தில் நாவை குதிரையின் வாயிலுள்ள கடிவாளத்திற்கும், கப்பலின் சுக்கானுக்கும் ஒப்பிடுகிறார். நவீன ஒப்புவமையில், நாவு ஒரு காரின் ஸ்டியரிங் வீலுக்கு சமமாகும். அந்த ஸ்டியரிங் வீலானது அந்த கார் போகும் திசையை நிர்ணயிக்கிறது. அந்த கார் எத்தனை வலுவுள்ளதாயிருந்தாலும், ஸ்டியரிங் வீல்தான் இன்னும் அத்தனை வல்லமைகளின் திசையையும் கட்டுப் படுத்துகிறது. இதைப்போலவே நாம் பேசும் வார்த்தைகளும் நம்முடைய முழுவாழ்க்கையின் நிகழ்வுகளையும், திசையையும் கட்டுப்படுத்துகிறது. நாம் என்ன பேசுகிறோம் என்பதைக் குறித்து கவனமாயிருக்கவேண்டும். நாம் என்ன பேசுகிறோமோ அது தேவ வார்த்தையோடு ஒத்துப்போக வேண்டும்.

*நாவடக்கத்தின் முக்கியத்துவம்*

கிறிஸ்தவ ஜீவியத்தின் நன்நடத்தையைக் குறித்த தெளிவான புத்திமதிகளை தெரிவிக்கும் அறிவுரைகளையும், நாவின் கட்டுப்பாட்டையும் அடக்கத்தையும் பவுல் ஏறக்குறைய தன்னுடைய எல்லா நிருபங்களிலேயும் வலியுறுத்துகிறார்.

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

தங்கள் வார்த்தையினால் பிரிவினை உண்டாக்குகிறவர்களுக்கு விலகவேண்டுமென்று ரோமருக்கெழுதின நிருபத்தில் பவுல் புத்திசொல்லுகிறார் (ரோமர்16:17,18).
ஒன்று கொரிந்தியரில், பக்திவிருத்தி உண்டாக்கும் காரியங்களைப் பேச வேண்டும் என்று அறிவுறுத்துகிறார் (1 கொரி .14:26).
இரண்டு கொரிந்தியரில், தன்னுடைய எழுத்துக்கள் இடித்துப்போடவல்ல, ஊன்றக்கட்டவே என்று சொல்லுகிறார் (2கொரி.13:10).
கலாத்தியரில், ஒருவரையொருவர் கடித்துப் பட்சிக்க வேண்டாமென்று அவர் சபையை பார்த்து சொல்லுகிறார் (கலா. 5:15).
எபேசியரில், நம்முடைய வாயிலிருந்து கெட்டவார்த்தை ஒன்றும் புறப்படவேண்டாம் என்றும், ஆனால் கேட்கிறவர்களுக்கு பிரயோஜனமுண்டாகும்படி பேசவேண்டும் என்றும் சொல்லுகிறார் (எபே.4:19).
பிலிப்பியரில், கற்புடைய காரியங்களையே தியானிக்கும்படி கூறுகிறார்(பிலி.4:8).
கொலோசெயரில், வார்த்தையினாலாவது, கிரியையினாலாவது, நீங்கள் எதைச்செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரியுங்கள் என்கிறார் (கொலோ.3:17). தெசலோனிக்கேயரில், அவர் நம்மை வீண் அலுவற்காரராய் இருக்க வேண்டாம் என்று சொல்லுகிறார்(2தெச. 3:11).
ஒன்று தீமோத்தேயுவில், வார்த்தையில் விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு என்று கூறுகிறார் (1தீமோ.4:12). ஆரோக்கியமான வசனங்களுக்கு ஒத்துவராத வேற்றுமையான உபதேசங்களை அங்கீரிக்க வேண்டாமென்று பவுல் சொல்லுகிறார். சீர்கேடான வீண்பேச்சுக்களுக்கும் விலக வேண்டும் என்று சொல்லுகிறார் (1 தீமோ 6:3, 20).
இரண்டாவது தீமோத்தேயுவில், கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டை பண்ணுகிறவனாயிராமல், சாந்தமுள்ளவனாய் இருக்கவேண்டும் என்று சொல்லுகிறார் (2தீமோ.2:24).
தீத்துவில், குற்றம்பிடிக்கபடாத ஆரோக்கியமான வசனத்தைப் பேசுகிறவனாயிருக்கவேண்டுமென்கிறார். புத்தியீனமான தர்க்கங்களையும் வம்சவரலாறுகளையும், சண்டைகளையும், அப்பிரயோஜனமும், வீணுமாயிருக்கும் வாக்குவாதங்களையும் விட்டுவிலக வேண்டுமென்கிறார் (தீத்து2:8; 3;9).
எபிரேயரில், நாம் அறிக்கைபண்ணுகிற பிரதான ஆசாரியர் இயேசுகிறிஸ்து என்றும், ஆகவே நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருக்கக்கடவோம் என்றும் அவர் கூறுகிறார் (எபி.3:1; 4:14;10:21-23).

கிறிஸ்தவ வாழ்க்கையில் நாவைக் கட்டுப்படுத்துவதின் தேவையைப்பாராமல், இந்த நிருபங்களை வாசிப்பவர்கள் யாரானாலும், அவர்கள் தங்கள் கண்களை பரிசோதித்துக்கொள்வது அவசியமாகிறது. தேவ வார்த்தைக்கு ஒத்த சரியான வார்த்தைகளைப் பேசுவது கிறிஸ்தவ வாழ்வில் வேறுபிரிக்க முடியாத ஒன்று என்று தேவ வார்த்தை சந்தேகத்துக்கிடமில்லாமல் சொல்லுகிறது.

### *பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்துவது*

பரிசுத்த ஆவியானவர் ஒரு நபராய் நாம் பேசும் வார்த்தைகளுக்கு உணர்வுள்ளவராயிருக்கிறார். எபேசியர் நான்காம் அதிகாரம் முப்பதாம்வசனம் நாவைக் குறிக்கும் இரண்டு வசனங்களுக்கிடையில் எப்படி வைக்கப்பட்டிருக்கிறது என்பதை கவனியுங்கள். அதே அதிகாரத்தில் உள்ள **25**, **29**, **31** ஆகிய வசனங்களும் நாவைக் கட்டுப்படுத்துவதையே வலியுறுத்துகின்றன. இந்தப் பகுதிகளிலிருந்து நாம் ஒரு முடிவுக்கு வரமுடியும், அது என்னவெனில் பரிசுத்த ஆவியானவரை நம்முடைய செய்கைகளால் எப்படி துக்கப்படுத்துகிறோமோ அப்படியே நம்முடைய வார்த்தைகளாலும் துக்கப்படுத்துகிறோம் என்பதாகும்.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

சில வேலைகளில், எனக்கு முன்பதாக மக்கள் தவறான வார்த்தையையோ, பேச்சையோ பேசுவார்களானால் ஆவியானவரில் ஒரு துக்கத்தை நான் உணர்வேன். முன்பெல்லாம் அதை நான் உணரவில்லை. ஆனால் பின்வருகின்ற காலங்களில் பரிசுத்த ஆவியானவருக்கு நெருக்கமாக நடக்க நான் பழகிக்கொண்டபோது, மனிதர்களாகிய நாம் உணரக்கூடாத அநேக காரியங்களுக்கு பரிசுத்த ஆவியானவர் எவ்வளவு உணர்வுள்ளவராக இருக்கிறார் என்பதை கண்டு கொண்டேன்.

பரிசுத்த ஆவியானவர் ஒரு நபரை ஆட்கொள்ளும்போது, முதலில் நடப்பது என்னவென்றால் அந்த நபர் புதிய பாஷையைப் பேசுகிறார் என்பதையும் காண்கிறோம். யாக்கோபு நிருபத்தின்படி நாவு நம்முடைய சரீரத்தின் கட்டுப்பாட்டு மையமாக இருப்பதால், பரிசுத்த ஆவியானவர் நம்மை நிரப்பும்போது நம்முடைய நாக்கைக் கட்டுப்படுத்துவது இயற்கையானதே. பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படுவது, நம்முடைய நாவைக் கட்டுப்படுத்துவதில் முடியும். அப்பொழுது நம்முடைய நாவு சங்கீதங்களையும், கீர்த்தனைகளையும், ஞானப்பாட்டுக்களையும் பாடும் (எபே.5:18,19). நம்முடைய வாழ்வில் கிறிஸ்துவின் வசனம் பரிபூரணமாயிருக்கும்போது இதே கட்டுப்பாட்டிலேயே முடியும் (கொலோ. 3:16).

*விசுவாச அறிக்கை*

தேவன் நம்முடைய ஜெபத்தை கேட்டிருக்கிறார் என்று விசுவாசிப்பதின் வெளிப்படையான ஒரு செயல்பாடு, நாம் ஜெபித்த காரியங்களைக் குறித்து நாம் எப்படி பேசுகிறோம் என்பதாகும். தாம் ஜெபித்த காரியங்களைக் குறித்து சில கிறிஸ்தவர்கள் பேசுவதைக் கேட்டால், தேவன் தங்கள் ஜெபத்தை கேட்டார் என்று அவர்கள் விசுவாசிக்கவில்லை என்பது தெளிவாகும். அவர்கள் ஜெபம் வெறும் மதச் சடங்காச்சாரமாக இருக்கிறது. தேவன் உண்மையாக இருக்கிறார்! அவர் தம்மை கருத்தாய் தேடுகிறவர்களுக்கு பலனளிக்கிறவர் (எபி 11:6).

சில மக்களுக்கு தம்முடைய சூழ்நிலையைக் குறித்து தேவ வார்த்தை சொல்லுவதை அறிக்கையிடுவது கடினமாயிருக்கிறது. ஏனெனில் அவர்கள் அதை உண்மையாய் தங்கள் இருதயத்தில் விசுவாசிக்கவில்லை. விசுவாசம் அவர்கள் இருதயத்தில் தோன்றும்வரை அவர்கள் வசனத்தை எடுத்துக்கொள்ளவேண்டும். அதன்பின்பு அறிக்கையிடவேண்டும். தாவீது கோலியாத்திற்கு எதிராக தைரியமாகப் பேசமுடிந்தது. ஏனென்றால் கோலியாத்தை வீழ்த்த தேவன் தனக்கு உதவிசெய்வார் என்று அவன் விசுவாசித்தான். விசுவாசஅறிக்கை என்பது முதலில் இருதயத்தில் விசுவாசித்து, பின்பு வாயினால் அறிக்கையிடுவதாகும்.

சில அறிக்கைகள் வாழ்வில் நிஜமாகாதிருப்பதின் பிரச்சனை என்னவென்றால், அவர்கள் வாய் அறிக்கையிடும்போது அவர்கள் இருதயம் சந்தேகத்தினால் நிறைந்திருக்கும். மாற்கு 11 ஆம் அதிகாரம் 24 ஆம் வசனம் சந்தேகப்படாத இருதயத்தை சார்ந்தே இருக்கிறது என்பதை தயவு செய்து கவனியுங்கள். நாம் பேசுவது எழுதப்பட்ட தேவ வார்த்தையோடு ஒத்திருந்து நாம் சந்தேகப்படாமல் இருந்தால், நாம் பேசுவதை நாம்பெற்றுக் கொள்ளமுடியும்.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

# அத்தியாயம் 5

## சிந்தனை வாழ்வின் முக்கியத்துவம்

அநேக கிறிஸ்தவர்கள் தங்களுடைய வெளிப்புற வாழ்வை மாற்றுவதில் அக்கறை காட்டுகிறார்கள். அதாவது முதலில் தங்களுடைய சிந்தனை வாழ்வை மாற்றாமல் தங்களுடைய பழக்கவழக்கங்களையும், நடத்தையையும் மாற்ற விரும்புகின்றனர். ஒரு பரிசுத்தமான சிந்தனை வாழ்வு இல்லாமல் பரிசுத்த நடக்கைகள் இருக்கமுடியாது. கிறிஸ்தவர்கள் தங்களுடைய சிந்தனை வாழ்க்கையை மாற்றக் கூடுமானால், அவர்கள் தங்களுடைய நடத்தையையும் மாற்றிக்கொள்ள முடியும். நிறைய போதனைகள் வெளிப்புற வாழ்வான புகைப்பிடித்தல், குடி இவை முதலானவைகளை விட்டு விடுவதையே எதிர்பார்க்கின்றன. இதை கேட்கும் கிறிஸ்தவர்கள் அவைகளை விட்டுவிட போராடுகிறார்கள். ஆனால் அவர்கள் உள்ளாக மாற்றமடையாததினால் வெற்றிபெற முடிவதில்லை.

*இயேசுவும் சிந்தனை வாழ்வும்*

மனித வர்க்கத்திற்கு இயேசு கொண்டுவந்த புரட்சி என்னவென்றால், பழைய உடன்படிக்கையை மாற்றி புதியதைக் கொண்டு வந்ததே. பழைய உடன்படிக்கை வெளிப்புற வாழ்வைக் குறித்தே அக்கறைகொண்டுள்ளது. நியாயப்பிரமாணத்தின் நீதியுள்ள கட்டளைகளுக்கு இணங்குவதற்குள்ள போராட்டம் வெளிப்பிரகாரமான இயலாமை அல்ல, உள்ளான இயலாமையே என்பதை பவுல் ரோமருக்கு எழுதிய நிருபத்தில் தெளிவுபடுத்தியுள்ளார்.

ஆவிமனிதன் அல்லது உள்ளானமனிதன் விருப்பத்துடன் மனப்பூர்வமாய் கட்டளைகளுக்கு கீழ்படிவதைக் குறித்து பவுல் பேசுகிறார் (ரோமர்7:22). எனினும், அவருடைய மனதிற்கு விரோதமாய் போராடும் வேறொரு பிரமாணத்தையும் அவர் காண்கிறார் (ரோமர் 7:23). போராட்டம் சிந்தனையில் தான். பின்பு அதே புத்தகத்தில் சரியான காரியங்களை சிந்திப்பதைக் குறித்துப் பேசுகிறார் (ரோமர் 8:5,6). எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்கு கீழ்படியசிறைப்படுத்த வேண்டும் என்று கொரிந்தியரில் தெளிவாக கூறுகிறார் (2கொரி. 10:5).

இயேசு தம்முடைய போதனையில், நாம் செய்கிற செயல்கள்மட்டும் முக்கியமல்ல, நாம் நினைத்து தங்கவைத்துக்கொள்ளுகிற நினைவுகளும் கூட பிரதான முக்கியத்துவம் வாய்ந்தது என்கிறார். ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடு விபச்சாரஞ்செய்தாயிற்று என்று இயேசு கருதுகிறார் (மத்.5:28). இருதயத்திலிருந்து வரும் சிந்தனைகளே மனுஷனைத் தீட்டுப்படுத்தும் என்று சொல்லுகிறார்(மத்.15:19,20). நம்முடைய இருதயத்திலுள்ள சந்தேகங்கள், தேவ வார்தைக்கு எதிரான சிந்தனைகள் ஆகும். இவைகள் மலைகளை அசைக்கத்தக்க விசுவாசத்தையும் செயலிழக்கச் செய்யும் என்று இயேசு குறிப்பிடுகிறார் (மாற். 11:23; மத். 21:21).

பேதுரு தண்ணீரின்மேல் வெற்றிகரமாக நடக்கமுடியாததற்கு காரணம் அவனுடைய சந்தேகங்களே என்பதை இயேசு தெளிவாக கூறுகிறார்(மத்.14:31). கெட்டசெய்தி வரும்போது பயப்படாமலிருக்கும்படி யவீருவிடம் இயேசு கேட்டுக்கொள்கிறார் (மாற். 5:36). பயப்படுவது என்பது பயம்நிறைந்த சிந்தனைகளால் நிரப்பப்படுவதே. நம்முடைய சிந்தனை வாழ்க்கையில் ஓடிக் கொண்டிருப்பதுதான், வெற்றிகரமாக அற்புதங்களை பெற்றுக்கொள்ளவும், செய்து காண்பிக்கவும் மிகமுக்கியமானது. இந்தக்கூற்றை சந்தேகிக்க இயேசு கொஞ்சம்கூட இடமளிக்கவில்லை.

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

*ஆவி உலகத்தோடு சிந்தைக்கு உள்ள உறவு*

சிந்தனையின் மண்டலம் சாத்தான் சோதனைகளை வைக்கும் மண்டலமும் ஆகும். கெட்டசிந்தனைகள், தீயசிந்தனைகள், பயமுள்ள சிந்தனைகள், இச்சையுள்ள சிந்தனைகள் எல்லாம் சாத்தானிடத்திலிருந்து தோன்றுகின்றன. தவறான சிந்தனைகளை அளித்து மக்களின் மனதில் அரண்களைக் அவன் கட்டுகிறான் (2கொரி.10:5). சாத்தானுடைய வார்த்தைகளுக்கும் எண்ணங்களுக்கும் செவிகொடுத்தபோது, ஆதாம் ஏவாளுடைய விழுகை ஆரம்பமாயிற்று. தேவ வார்த்தைக்கு எதிரான சிந்தனைகளை கொடுப்பதின்மூலம் சந்தேகத்தையும், அவிசுவாசத்தையும் உண்டாக்கிவிடுகிறான்.

சாத்தான் ஒரு விழுந்துபோன ஆவி என்றும் இயற்கையான மாம்சமும் இரத்தமும் அவனுக்கில்லை என்பதையும் எப்பொழுதாகிலும் நீங்கள் சிந்தித்ததுண்டா? அப்படியானால், ஒரு ஆவிக்கு சிந்தனை மண்டலத்தை தாக்க இயலும் என்பதை உணர்ந்தீர்களா? ஆவியின் மண்டலத்திற்கும் சிந்தனையின் மண்டலத்திற்கும் ஒரு நேரடித் தொடர்பு இருக்கிறது. ஆவிக்குரிய உலகத்தின் காரியங்களைப் பெற்றுக்கொள்ளும், ஆவிக்குரிய ஒரு உணரும் கருவியே மனித மனமாகும்.

அப்படியே விழுந்துபோன நிலையிலுள்ள மனிதமனம் ஆவிக்குரிய மண்டலத்திலுள்ளவைகளை அறியும் ஒரு பூரண கருவியாகாது. எனினும் ஆவி உலகத்திற்கும், மனம் (அ) சிந்தனைக்கும் ஒரு நிச்சயமான தொடர்பு இருப்பதை நாம் தொடர்ந்து காணலாம். தேவன் ஆதாம் ஏவாளை படைத்தபோது, ஆவிக்குரிய மண்டலத்தோடு தொடர்பு கொள்ளக்கூடிய பூரண கருவியாக மனிதமனம் இருந்தது. ஆதாம் பாவத்தில் விழுந்து போனதிலிருந்து, இருள் மனிதமனத்தை ஆளுகைசெய்ய ஆரம்பித்தது. தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராக்கிக் கொண்ட மனிதர்கள் புத்தியில் அந்தகாரப்பட்டுப் போனார்கள் என்று பவுல் எழுதுகிறார் (எபே. 4:17,18).

*சிந்தனையின் நோக்கம்*

நாம் பெற்றுக்கொள்ளும் சிந்தனைகள் மூன்று மண்டலங்களிலிருந்து வருகின்றன. அது பௌதிக மண்டலத்திலிருந்து வரலாம், மனதின் மண்டத்தில் (நாம் நம்முடைய சிந்தனைகளை சிந்திக்கும் இடம்) இருந்து வரலாம் அல்லது ஆவிக்குரிய மண்டலத்திலிருந்து வரலாம். ஆவிக்குரிய மண்டலத்திலிருந்து வரும் சிந்தனைகளை, பௌதீக சிந்தனையிலிருந்தும் மனதின் மண்டலத்திலிருந்தும் வரும் சிந்தனைகளிலிருந்தும் நாம் வேறு படுத்த முடிந்தால் நாம் ஆவிக்குரிய நிலையில் அதிகம் உணர்வுள்ளவர்களாயிருப்போம். நம்முடைய மனதில் வரும் சிந்தனைகள் தேவனால் கொடுக்கப்பட்டவையா அல்லது சாத்தானால் கொடுக்கப்பட்டவையா என்பதை இன்னும் அதிக அளவில் வேறுபடுத்தி எடுக்கக்கூடுமானால் நாம் தேவ உணர்வுள்ளவர்களாயிருப்போம்.

சாத்தான் சோதனைகளை நம்முடைய சிந்தனை வாழ்வில் போட்டு தடுத்துநிறுத்த முயற்சிப்பதின் உட்கருத்து என்னவெனில், நாம் பரிசுத்த ஆவியானவரிடமிருந்து வரும் சிந்தனைகளை நிதானிப்பதை தடுக்கவே ஆகும். அது ரேடியோ ஆப்பரேட்டர்கள் ஒரு அலைவரிசையைத் தடுக்க அதே அலைவரிசையில் வெறொன்றை ஒலிபரப்புவதைப் போலாகும். இதனால் உருவாக்கப்படும் நிலையானது, ஒன்று, நாம் கேட்கவேண்டிய ஒலிபரப்பை முழுவதும் கேட்க முடியாமலாகும் அல்லது நாம் கேட்கவேண்டிய ஒலிபரப்பு காதில் விழாதபடி அதிகமான மின்சார சத்தங்களும் சமநிலையிலுள்ள விசைகளாகவும் இருக்கும். நம்முடைய மனதின் நோக்கம் பரிசுத்த ஆவியானவரிடமிருந்து வரும் சிந்தனைகளைப் பெற்றுக்கொள்ளும் நிலையம் என்பதை கிறிஸ்தவர்கள் உணரும்போது, மீண்டும் ஒருவிசை கெட்டஎண்ணங்கள் நம்முடைய பெற்றுக்கொள்ளும் அலைவரிசையைத் தடுக்க விடமாட்டோம்.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

தேவன் நேரடியாக நம்முடைய மனதிற்கு ஒளிபரப்புகிறார் என்று சொல்வதற்கில்லை, மாறாக அவர் நம்முடைய ஆவிக்கு ஒளிபரப்புகிறார். ஆவியானவர் நமது ஆவியோடே தொடர்பு கொள்ளுகிறார். எனினும் பரிசுத்த ஆவியானவர் மனிதஆவிக்கு சொல்வது மனித மனத்தில் உள்ளான எண்ணங்களாக எழும்பும். நம்முடைய மனங்கள் புதிதாக்கப்பட்டு நம்முடைய ஆவிக்கு இசைவாக்கப்பட்டிருக்கும் பட்சத்தில் இப்படி நடக்கும்.

தேவ வார்த்தையானது இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும், ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக்குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும், யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது. (எபி.4:12). நம்முடைய மனதில் தோன்றும் யோசனைகளை நாம் ஏன் வகையறுக்க வேண்டும்? தேவனிடமிருந்து வரும் சிந்தனைகளுக்கும், அவரிடமிருந்து வராத சிந்தனைகளுக்கும் உள்ள வித்தியாசத்தை நிதானித்து அறிவதே அதன் நோக்கமாகும். அதை செய்யும் கருவி தேவ வார்த்தையே.

தன்னுடைய வார்த்தை அவர்களை சுத்தமாகிற்று என்று இயேசு தம்முடைய சீஷர்களிடத்தில் சொன்னார் (யோவா.15:3). அதை முன்புள்ள வசனத்தில், கனி கொடுக்கிறவன் அதிகக் கனிகளைக் கொடுக்கும்படி சுத்தம் செய்யப்படவேண்டும் என்று சொல்லுகிறார் (யோவா.15:2). ‘சுத்தம்’ ‘கிளைநறுக்குதல்’ என்ற இரு வார்த்தைகளும் ஒரே கிரேக்கப் பதத்திலிருந்து வருகின்றன என்பது சுவாரஸ்யமான ஒன்று. ‘கிளை நறுக்குதல்’ என்பது வார்த்தையால் செய்யப்படுகிறது என்பதை இயேசு உண்மையாகக் குறிப்பிடுகிறார். தேவ வார்த்தை நம்முடைய சிந்தனைகளையும், யோசனைகளையும் சுத்திகரிக்கிறது. இயேசுகிறிஸ்து மணவாட்டியை திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரிப்பது, இயேசு கிறிஸ்தவின் சபை பூரணப்படுத்தப்படுவதற்கு ஒப்பிடப்படுகிறது (எபி.5:26).

*தெளிவான சிந்தனையின் பயன்கள்*

இயேசுகிறிஸ்து நம்முடைய சரீரங்கள் பரிசுத்தமாக்கப்படுவதை மட்டுமல்லாமல், நம்முடைய மனதும் பரிசுத்தமாக்கப்படுவதை எதிர்பார்க்கிறார். நாம் தினந்தோறும் தேவ வார்த்தையை எடுத்து அதை சிந்திக்க ஆரம்பிக்கும்போது, நம்முடைய மனது பரிசுத்தமாக்கப்படுவதின் ஒரு பகுதி ஆரம்பமாகிறது. கிறிஸ்தவர்களை பெலமுள்ளவர்களாக்கும் சிந்தித்து தியானிப்பதைக் குறித்த ஆதிகால கிறிஸ்தவ போதனைகளை நாம் புத்துயிர் பெறச்செய்ய வேண்டும். நூற்றாண்டுகளுக்கு முன்பு கிறிஸ்தவர்கள் கண்டுபிடித்த சத்தியங்களை நிகழ்கால பெந்தெகொஸ்தே எழுப்புதலுடன் சேர்த்து நாம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டால், உள்ளும் புறமும் ஒரு வல்லமையுள்ள எழுப்புதலை நாம் பெற முடியும்.

தெளிவான சிந்தனை ஜீவனுக்கும் சமாதானத்துக்குமுரிய பலன்களை அறுவடைசெய்யும் (ரோம.8:6). பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்படும் பொருட்டு, ஆவியின் காரியங்களில் கவனமாயிருக்க பவுல் ரோமருக்கு எழுதிய நிருபம் எட்டாவது அதிகாரத்தில் அறிவுறுத்துகிறார். ஆவிக்குரிய சிந்தையோடு இருப்பதின் பலன்களைக் குறித்த வியாக்கியானத்தை முடிக்கும்போது பன்னிரெண்டாம் வசனத்தில் ‘ஆகையால்’ என்ற வார்த்தை உபயோகப்படுத்தப்பட்டிருப்பதைக் கவனிக்கவேண்டும். ஆவியின் சிந்தையாயிருப்பதை பயஆவி இல்லாமல் பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்படுவதோடு பவுல் இணைக்கிறார். (ரோமர் 8:14).

மேலும், உள்ளான சாட்சிகளில் மிகவும் பலமான சாட்சி தேவ சமாதானமே. நாம் தேவசமாதானத்தை நம்முடைய இருதயங்களில் தொடர்ந்து தீர்மானிக்கும் நடுவராக இருக்க அனுமதிக்க வேண்டுமென்று ‘ஆம்ப்ளிபைட்’ வேதாகமம் தீர்க்கமாக சொல்லுகிறது(கொலோ.3:15).

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

பரிசுத்த ஆவியானவர், நம்முடைய இருதயங்களிலுள்ள தேவசமாதானத்தின் மூலம் நடுவராகவும், நடத்திசெல்பவராகவும் இருக்கிறார். ஆவியானவரின் காரியங்களை கவனிக்காமல் நாம் இந்த சமாதானத்தைப் பெற்றுக்கொள்ளமுடியாது (ரோமர் 8:6).இன்னுமதிகமாக, சமாதானம் நம்முடைய இருதயத்தில் 'தீர்மானிக்கும் விளைவாக' செயல்படுவதை பவுல் பேசும்போது, அடுத்துவரும் வசனத்திலேயே கிறிஸ்துவின் வசனம் உங்களில் பரிபூரணமாய் (அபிரிமிதமாய்) வாசமாயிருப்பதாக என்றும் கூறுகிறார்(கொலோ. 3:16). தேவ வார்த்தையை சிந்தித்து தியானம் செய்வது என்பது, நாம் பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்படுவதைக்குறித்து நம்மை அதிக உணர்வுள்ளவர்களாக்கும்.

தேவனோடு நெருங்கி வாழ்வதை உண்மையாக விரும்பும் கிறிஸ்தவர்கள், அறிக்கையிடுதல், சிந்தித்து தியானம் செய்தல் ஆகிய இவைகளைக் குறித்த முதன்மையான இரண்டு திறவுகோல்களில் புலமை பெற்றிருக்க வேண்டும். இந்தக் கொள்கைகள், ஒரு ஊழியரின் வாழ்வு உட்பட ஒரு முழு கிறிஸ்தவ வாழ்க்கைக்கும் இன்றியமையாதவைகள். இந்தக் கொள்கைகளை உதாசினப்படுத்துவது, ஒரு ஆழமற்ற வெறும் மேலோட்டமான கிறிஸ்தவ வாழ்க்கைக்கே வழிவகுக்கும். காலத்தைக் கடத்திப் போடாதே. இப்பொழுதே இந்த இரண்டு கொள்கைகளையும் கற்றுத்தேற ஆரம்பியுங்கள். தேவன் நமக்கு தூரமானவராக இல்லை. நாம் அவருடைய பிரசன்னத்தைக் கிட்டிச்சேர கற்றுக்கொள்வதை எதிர்பார்த்து, அவர் எல்லா நேரமும் நமக்காக காத்துக்கொண்டிருக்கிறார்.

"இன்றைக்கு நான் உங்களுக்கு விதிக்கும் கட்டளை, உனக்கு மறைபொருளும் அல்ல, அது உனக்குத் தூரமானதும் அல்ல. 'நாங்கள் அதைக் கேட்டு, அதின்படி செய்யும்பொருட்டு, எங்கள் நிமித்தம் வானத்துக்கு ஏறி, அதை எங்களுக்குக் கொண்டுவருகிறவன் யாரென்று? நீ சொல்லத்தக்கதாக, அது வானத்திலுள்ளதும் அல்ல; 'நாங்கள் அதைக் கேட்டு, அதன்படி செய்யும் பொருட்டு, எங்கள் நிமித்தம் சமுத்திரத்தைக் கடந்து, அதைக் கொண்டுவருகிறவன் யார்? என்று நீ சொல்லத்தக்கதாக, அது சமுத்திரத்திற்கு அப்புறத்திலுள்ளதும் அல்ல; நீ அந்த வார்த்தையின்படியே செய்யும் பொருட்டு, அது உனக்கு மிகவும் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறது. இதோ, ஜீவனையும் நன்மையையும், மரணத்தையும் தீமையையும் இன்று உனக்கு முன்னே வைத்தேன். நீ பிழைத்துப் பெருகும்படிக்கும், நீ சுதந்தரிக்கப்போகிற தேசத்தில் உன் தேவனாகிய கர்த்தர் உன்னை ஆசீர்வதிக்கும்படிக்கும், நீ உன் தேவனாகிய கர்த்தரில் அன்புகூரவும், அவர் வழிகளில் நடக்கவும், அவர் கற்பனைகளையும் கட்டளைகளையும் நியாயங்களையும் கைக்கொளளவும், நான் இன்று உனக்குக் கற்பிக்கிறேன். " உபா. 30:11-16.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.*